நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 23 ஏப்ரல் 1993 விலை 5/-


## எல்லாமே அவர் நலனுக் காய் !



வீட்டைத் தா வளவைத்தா விரும்பியவள் போட்டிருந்த
தோட்டையுங் கழற்றித் தாவென்றோம் - கேட்டாயோ
எல்லாமே பறித்தோம்; எங்கேனும் போவென்றோம். அல்லாவே
எல்லாமே அவர் நலனுக் காய்.

-ஈழமோகம்-



B.B.C.

# திருமலையில்திட்டமிட்ட குடியேற்றம்

# தமிழ்க் கட்சிகள் மௌனம்

திருமலைப் பிரதேசத்தின் நகர்ப்பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளன. அரசின் ஆதரவுடனே பௌத்த பிக்குகளின் மேற்பார்வையில் படையினராலேயே இக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

தமிழர்களுக்கும், தமிழ் நிறுவனங்களுக்கும் சொந்தமான காணிகளிலேயே இவ்வாறு சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றார்கள். அவ்வப்போது நடைபெறும் தாக்குதல்கள் காரணமாக தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்த தமிழர்களது, வீடுகளிலும் காணிகளிலுமே இக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகிறது.

திருமலையில் நடந்த ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் போது இக் குடியேற்றங்கள் தொடர்பாக அங்கு கிளை வைத்து இயங்கும் மூன்று தமிழர் இயக்கங்கள் மகஜர் ஒன்றைக் கையளிக்க முனைந்ததாகக் கேள்வி. பிறகு அரசுடன் இரகசியமாகப் பேசியதில் ஏற்பட்ட விசுவாசத்தில் மகஜர் விவகாரம் உடைப்பில் போடப்பட்டதாகவும் தெரிகிறது.


அங்கிருந்து கிடைக்கிற இன்னொரு தகவல்; தமிழ் இயக்கம் ஒன்றின் அலுவலகத்திற்கு அண்மையிலேயே இக் குடியேற்றங்கள் நடைபெறுவதாகவும் இது பற்றி எந்த அக்கறையுமின்றி அது மாகாணசபைத் தேர்தலில் திருமலை மாவட்ட தமிழ் வாக்குகளை ஐ.தே. கட்சிக்கு விழப்பண்ணுவதில் படு பிஸியாக இயங்கிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கிறது.

மற்றைய தமிழ் அமைப்புக்களோ பாராளுமன்றத்தில் பேசுவதுடன் குடியேற்றம் பற்றிய தமது கடமையை முடித்துக்கொண்டன.

வடகிழக்கு மாகாணங்களைத் திட்டமிட்டுப் பிரிப்பதற்காக மணலாறு முதல் திருமலை வரை மேற்கொள்ளப்படும் இக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துவதில் அக்கறையில்லாமல் 'வடகிழக்கு இணைப்பு' எனறு அறிக்கை விடுவதில் என்ன அர்த்தம் தான் இருக்கப் போகிறது.

ஆக கண்முன்னாலேயே நடைபெறுகிற இக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தாமல், நிறுத்த முடியாத இவர்கள் '' தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்களே! '' என்று யாரை நம்பச் சொல்லுகிறார்கள்?

## எங்களை விடுதலை செய்யுங்கள்!



'' எங்கள் மீது குற்றம் இருப்பின் வழக்குத் தொடருங்கள் இல்லையேல் விடுதலை செய்யுங்கள்'' எனக் கோரி பூசா தடுப்பு முகாமில் இருக்கும் தமிழ், சிங்கள இளைஞர்கள் மார்ச் 28 முதல் சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

நாளுக்கு நாள் உண்ணா விரதிகளின் தொகை அதிகரித்து வருகிறது. களுத்துறைச் சிறையிலிருப்போரும் இதே கோரிக்கைக்காக திங்கள் முதல் உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டவர்கள் முதல் இவ் வருட ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டவர்கள் வரை 200க்கும் மேற்பட்டோர் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

92 டிசெம்பரில் சிறையிலுள்ள கைதிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக உயர் நீதிமன்ற நீதியரசருக்கும் சட்டமா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டது. ஆனால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

93 பெப்ரவரியில் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும், எதிர்க் கட்சிக்கும் கையெழுத்திட்டு மகஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கும் எதுவித நடவடிக்கையுமில்லை. ஆகவே உண்ணா விரதத்தில் குதித்திருக்கிறார்கள்.

அதுசரி ஜனாதிபதி பி.பி.ஸியில் அரசியல் கைதிகளே இல்லை என்றாரே?

இவர்கள் எல்லாம் யார்?

## மின்சாரமல்ல மண்ணெண்ணையே கேட்கிறோம்

வவுனியாவில் நடைபெற்ற மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒருவர் பின்வருமாறு பேசினார்!

'' மின்சாரத்தைக் கேட்கவில்லை; மண்ணெண்ணையே கேட்கின்றோம். வளமான வாழ்க்கையைக் கேட்கவில்லை; உயிர் வாழ உத்தரவாதம் கேட்கிறோம். '' மகாபொல புலமைப் பரிசிலைப் பெறுவதற்காக இவர்களுடன் உடன் வந்திருந்த வின்சன் நிக்கிளஸ் என்பவர் கிளாலிக் கரையில் இராணுவத்தின் ஷெல் வீச்சுக்குப் பலியானார். உயிருக்கு உத்தரவாதமில்லை என்கிற முக்கியமான பிரச்சினை ஒருபுறமிருக்கட்டும். அதைப் பற்றி யாழ்ப்பாணத்தில் யாரும் இப்போது பேசுவதில்லை. ஆனால், மாணவர்கள் கல்வி கற்க மிகக் கஷ்டப்படுகிறார்கள் என்பது ஒரு பெரிய பிரச்சினை. அங்கு ஒரு லீட்டர் மண்ணெண்ணைய் 250 ரூபா. பல்கலைக் கழக மாணவர் ஒருவருக்கு தவணைக்கு ஒரு தடவை ஒரு லீட்டர் வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கான பாடசாலைக் காகிதாதிகள் வழங்கப்படுவதில்லை. ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்: '' ஒரு நாளைக்கு ஆட்டுப் புழுக்கையளவு சோக்குத் துண்டு தந்து விட்டு படிப்பி என்றால் என்னவென்று படிப்பிப்பது? '' வெண்கட்டி கிடையாது; கரும்பலகைக்குப் பூச கறுப்பு மை கிடையாது. மாணவர்களுக்கான சீருடை மிகக் கடினம். அரசாங்கத்தால் இலவசமாக அனுப்பி வைக்கப்பட்ட சீருடைத் துணிகள் சில இடங்களில் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டு மாணவர்களுக்கு 40 ரூபாவிற்கு வழங்கப்படுகிறது. மாணவர்களுக்காக வழங்கப்படும் மதிய உணவு முத்திரையும் புலிகளால் 'விழுங்க'ப்படுகின்றன.

கல்விதான் யாழ்ப்பாணத்தின் சொத்து. கல்விக்கூடங்கள் தரை மட்டமாக்கப் படுகின்றன. யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளான தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, இளவாலை புனித என்றியரசர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி போன்ற 50 இற்கு மேற்பட்ட பாடசாலைகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு விட்டன. அவற்றின் கட்டிடங்கள் - கூட சிதைக்கப்படுகின்றன.

யாழ் பல்கலைக் கழக மாணவரின் கோரிக்கை மாத்திரமல்ல இது; தமிழ் பேசும் அனைத்து மாணவரின் கோரிக்கை இது.



கிளாலி- களத்தில் 'இருந்து'

நன்றி - நூலகத்திட்டம்



## முட்டையில் ஜனநாயகம்

கடந்த பதினெட்டு மாதங்களுக்கு மேலாக '' தீவிர முயற்சியில்'' ஈடுபட்டிருந்த பாராளுமன்ற தெரிவுக் குழு எதிர் பார்த்தது போலவே ஒரு உப்புச் சப்பற்ற தீர்வை தன் இடைக் கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதில் அங்கம் வகித்த தமிழ்க் கட்சிகள் உட்பட இந்த நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் தெளிவாக தெரிந்த விடயம்தான் இது.

ஆனால் இந்தக் கட்சிகள் இக்குழுவின் முன்னால் மாறிமாறி கருத்துத் தெரிவித்து வந்தன.

மலடியிடம் பிள்ளையை எதிர்பார்த்தது போல, முடிவு தெரிந்தும் சேர்ந்த' முயன்றன.

இப்போது தாம் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ள போதும், இக்கட்சிகள் ஒரு ''சுமுகமான தீர்வுக்கான'' முயற்சிக்கு ஆதரவு தெரிவிப்பதாய் அறிவித்துள்ளன.

இவர்கள் கருதும் சுமுகமான தீர்வு என்ன என்பது இவர்களுக்கே தெரியுமோ தெரியவில்லை.

இந்த இடத்தில், திருகோணமலையில் தமிழர்களுக்கும், தமிழர் சார்பு நிறுவனங்களுக்கும் சொந்தமான நிலங்களில் அரசாங்கத்தின் முழுமையான ஆதரவுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவதைப் பற்றி எமது வாசகர் ஒருவர் சொன்னது ஞாபகத்திற்கு வருகின்றது.

''இவர்கள் இப்படியான பிரச்சினைகளுக்கு எதிராக ஒரு நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள். அரசாங்கத்தின் மேல்மட்டத்தோடு கதைத்துவிட்டு எல்லாம் சரிவரும் என்று தம்மைத் தாமே பேய்க் காட்டிக் கொள்வார்கள். பாராளுமன்றத்தில் சும்மா சாட்டுக்கு நாலுவரி பேசி வைப்பார்கள்.... பிறகு... புலியள் தங்கடை பாணியிலை சிங்களச் சனத்தை சுட்டுத் தள்ளினால் மட்டும் அரசாங்கத்தோடை நின்று கொண்டு ஆ..ஊ எண்ணுவினம்.....''

''இவர்கள் ஜனநாயக வழியில் பிரச்சினையைத் தீர்க்க முயல்பவர்கள் அல்லவா?'' என்றேன் நான்.

'' உது முட்டையில் ஜனநாயகம்... பாராளுமன்றத்திலை கதைக்கிறதும் பேப்பரிலை அறிக்கை விடுகிறதும் தான் ஜனநாயகம் எண்டால் உந்த ஜனநாயகத்தை ஆருக்கு வேணும்... உதைவிட புலியளின்றை ''பாசிசம்'' பரவாயில்லை...''

எனக்கு இதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை.

டக்ளஸ் தேவானந்தா போல ''நாம் பாரம்பரிய தாயகக் கோரிக்கைக்கு ஆதரவில்லை'' என்று தெரிவித்திருந்தால் இந்தக் கட்சிகள் இப்படி ஏச்சு வாங்க வேண்டியதில்லை.

அவர் புத்திசாலி!

## மூன்று நூற்றாண்டு அடிமைத்தனம்

தமிழர்கள் தமிழில் கையொப்பமிடுவதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் கையொப்பமிடுவதை - அதுவும் ஆங்கிலம் நன்றாகத் தெரியாத போதும் ஆங்கிலத்தில் கையொப்பமிடுவதை - எமது தமிழ்ச் சமூகத்தில் ஊறியிருக்கும் '' மூன்று நூற்றாண்டுகள் '' பழமை வாய்ந்த அடிமைத் தனத்தின் வெளிப்பாடு என்கிறார் எனது சமூகவியல் நண்பர். ''குறிப்பாக படித்த நடுத்தர வர்க்கத்தினரிடம் இத்தகைய போக்கு பெருமளவில் காணப்படுகிறது. ஆங்கிலத்தின் சுவடு கூட தெரியாத படித்தவர்களை விட்டால் மற்றவர்கள் அனேகமாக ஆங்கிலத்திலேயே கடிதங்களுக்கான முகவரிகளையும் எழுதுகிறார்கள். அதுவும் தமிழ்ப் பிரதேசங்களுக்குள் போடுகின்ற கடிதங்களுக்குக் கூட இந்த நிலைதான். யாழ்பாணத்தில் கடித விநியோகம் செய்கிற ஊழியர்களிடம் விசாரித்ததில் எழுபதுக்கும் எண்பதுக்கும் இடைப்பட்ட வீதத்திலுள்ள கடிதங்களில் ஆங்கிலத்திலேயே முகவரி எழுதப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள்'' என்கிறார் அவர்.

'' ஆங்கிலம் உயர்ந்த மொழி, வெள்ளை உயர்ந்த நிறம், ஐரோப்பியர் அறிவாளிகள் போன்ற உணர்வை எமது இனம் இன்னமும் கடந்து விடவில்லை. ஐரோப்பிய நாடு முழுவதும் தமிழர் இன்று போன பின்னரும் இது நடக்கிறது.''

''ஜேர்மனியிலும், சுவிஸிலும், நோர்வேயிலும் இருந்து கனடாவை நோக்கி எமது தமிழர்கள் ஓடுவதற்குக் காரணமும் இந்த 'ஆங்கிலம்' உயர்வானது என்ற மோகம்தான்.''

ஆனால் தபால் உறையில் முகவரி எழுதுவதைப் பற்றி சொன்னதை விட்டாலும் கையெழுத்துப் போடுவது ஒரு தனி மனிதனின் சுதந்திரம்தானே என்று கேட்டேன் நான். ''அது வெறும் அடையாளம்தானே''.

சரி, ஆனால் அந்தச் சுதந்திரம் ஏன் ஆங்கிலத்துடன் நிற்கிறது? எத்தனை தமிழர்கள் டொச்சில், பிரெஞ்சில் அல்லது நோர்வேஜியன் மொழியில் கையொப்பமிடுகிறார்கள்? என்று திருப்பிக் கேட்டார் அவர்.

தமிழர்களின் அடிமைப் பண்பிற்கும் அவர்களது இன்றைய நிலைக்குமிடையிலான தொடர்பினைப் பற்றி இவர் செய்விருக்கும் ஆய்வினைப் பற்றி குறிப்பிட்ட இவர், சிங்கள மக்களிடையே இந்த மோகத்தின் அளவு பெருமளவு குறைவு என்ற ஒரு உண்மையையும் தெரிவிக்கிறார்.

எமது வாசகர்களுக்கு இதை நான் சமர்ப்பிக்கிறேன்.

## நியாயப்படுத்தலின் கைதிகள்

''எமது எதிராளிகள் எவ்வளவுக்கு எவ்வளவு மோசமானவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நாம் செய்கிற அனைத்தையும் இலகுவில் நியாயப்படுத்தி விடுகிறோம்.''

பத்திரிகையாளர் ஜெஹான் பெரேரா ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு எழுதினார்.

இலங்கை அரசின் இனவாத நடவடிக்கைகளின் தீவிரம், தமிழ் தேசியப் போராட்டத்தின் பல வரம்பு மீறல்களை நியாயப்படுத்த வாய்ப்பளித்தது.

அநுராதபுரப் படுகொலைகளைக் கூட, சில தமிழ்ப் பத்திரிகையாளர்களும், புத்திசீவிகளும் ''விளங்கிக் கொள்ள முடியும்'' என்று நியாயப் படுத்தினார்கள்.

அது இல்லாவிட்டால் திம்புப் பேச்சுவார்த்தைக்கு அரசு வந்தே இருக்காது என்றும் சிலர் தர்க்கித்தார்கள்.

இன்று புலிகளின் ஜனநாயக விரோத, மக்கள் விரோத செயற்பாடுகளில் பல அவர்களின் பேரால் நடாத்தப்படும் பல நிகழ்ச்

## மெல்லத் தமிழினி

சிகளை நியாயப் படுத்தி விடுகிறது.

வடக்கு கிழக்கில் நடாத்தப்படுகிற யுத்தமும், உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடையும் இவ்வாறே நியாயப்படுத்தப் படுகின்றன. 1987இல் வடக்கில் உணவுப் பொருட்களை இந்தியா போட்ட போதும் சரி, புலிகளின் முன்னாள் தளபதி கிட்டு வந்த கப்பலை சர்வதேசக் கடலெல்லையில் வைத்து இந்தியா ஆக்கிரமித்ததாகக் கூறும் போதும் சரி இச் செய்கைகள் நியாயப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு நியாயப்படுத்தல்களிலும் அவ்வக் காலங்களில் பயனடைந்தவர்கள் இன்னொரு நியாயப்படுத்தலின் போது பாதிக்கப்படுகிறார்கள்.

இன்று கிட்டு வந்த கப்பலை இந்தியா ஆக்கிரமித்ததையும் சரி, முஸ்லீம்களைப் புலிகள் விரட்டியதையும் சரி நியாயப்படுத்துபவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை.

இந்த நியாயப்படுத்தலின் கைதிகளாகத் தாமே ஆகிப் போய் விடுகிறோம் என்பதுதான் அது.

இதனை புலிகளும் சரி, இலங்கை அரசும் சரி, அதன் நிழலுக்குள் பதுங்கி நிற்கும் தமிழ்க் குழுக்களும் சரி புரிந்து கொண்டதாக தெரியவில்லை.

## நக்கிப் பிழைப்போர்க்கு!

வித்துவான் வேலனுக்கு, இந்து சமய கலாசார இராசாங்க அமைச்சு 'ஞான சிரோன்மணி' பட்டமளிப்பதற்கு ஒழுங்கு செய்திருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்திருந்த கிருபானந்த வாரியார் அவர்கள் வித்துவானுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்து இப்பட்டத்தை வழங்குவதென்பது அமைச்சின் ஏற்பாடு.

ஆனால் வித்துவான் வேலன் அவர்கள் இந்தக் கௌரவிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்மக்கள் அகதிகளாகவும் அன்னந்தண்ணி இல்லாமலும் சாக நான் மட்டும் பட்டத்தை ஏற்பதா என்று கேட்கிறார் அவர்.

இதற்குப் பதிலாக அவர் எழுதிய கவிதை இதோ:

### அரச கௌரவம் யானிதை ஏற்பனோ?

அகதிக ளாகியே தமிழர்கள் அலையவும்
அன்னந் தண்ணியி லாதவர் சாகவும்
சகதிகள் சேறுகள் தாண்டி வந்தவர்
சாவினை வழியிலே சந்திக்க நேரவும்
அகமு முருகி என் ஆவி கலங்கிட
அரச கௌரவம் யானிதை ஏற்பனோ
சகமு முணர்ந்திடும் சான்றோர் உணர்வரால்
சாவினை வென்றவன் வேலன் அறிவையோ

அரசாங்கத்தில் கால்களை நக்கிப் பிழைக்க இன்றும் தயாராக உள்ள அனைவருக்கும் இது சமர்ப்பணம்.

## தமிழ் றெஜிமென்டும் தலைவிதியும்

கிளாலிப் பாதை தடை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் '' உத்தியோகபூர்வமாக '' அறிவித்து மூன்று மாதங்களாகி விட்டன.

அப்பாதையால் வருபவர்களை சுட்டால், அவர்கள் சுடுபட்டு இறந்தால் இறந்தவர்கள் புலிகள் என்று சாதிக்கிறது அரசு.

தப்பித் தவறி வந்துவிட்டால், அவர்களுக்குத் தென்பகுதிக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டு இன்றுவரை வழங்கப்படுகிறது.

வருபவர்களில் யாராவது ஒரு புலி தப்பித்தவறி வந்துவிட்டாலுமோ என்று ெடிகட்டி அனுப்ப வழியில் சாக்கு மறைப்புக்குள் '' அடையாளம் காணும் '' விசாரணைகளை மேற்கொள்ளவென ஸ்ரீலங்கா ராணுவத்தின் அங்கீகரிக்கப்படாத புதிய தமிழ் றெஜிமென்டில் சிலர்.

தென்னிலங்கைக்குள் புகுவதற்கான ''என்றி விசா '' பெற நிற்கும் தமிழர்களுக்கு நாளாந்தம் நடக்கும் அனுபவங்கள் சுவைமிக்கவை!

சென்ற மாத நடுப்பகுதியில் வந்த ஒருவருக்கு இப்படி ஒரு அனுபவம்:

கியூவிலிருந்த இவரது மனைவி முதலில் தனியாக அழைத்து விசாரிக்கப்பட்டார்.

பிறகு இவர் அழைக்கப்பட்டார். ( 'நல்ல' தமிழில் )


முதலில் இலங்கை இராணுவம், பிறகு ஐ.பி.கே.எப், பிறகு புலிகள், இவர்கள் என்று இந்தத் தொடர்ச்சியான விசாரணை வரலாற்றைப் பற்றிய '' வரலாற்று அனுபவங்களை '' இரைமீட்டபடி நின்ற இவர் இந்த அழைப்பைக் கவனிக்கவில்லை.

இன்னொரு உரத்த அழைப்பின் பின் விசாரணைக்கான இடத்துக்கு ஓடிய இவர் அழைத்தவுடன் வராததற்கான விசாரணையையே முதலில் எதிர் நோக்க வேண்டி இருந்தது!

தனது கையால் தன்னை இறுக்கிக் குட்டுமாறு பணிக்கப்பட்டார் - விசாரணை முடிவில்.

இந்த இளம் வீரத் தலைமுறையை வளர்த்து விட்ட தனதும் தனது இனத்தினதும் தவறை நினைத்தோ அல்லது தலைவிதியை நினைத்தோ அவர் தனது தலையில் குட்டிய வேகத்தில் மனைவியின் கண்களில் நீர் தெறித்தது!

### ஒரு க்ளெஃப்டிக் பாடல்




நமது தோழர்கள்
என்னைப் பற்றி ஏதேனும் கேள்விகளை
உன்னிடம் கேட்பார்களேயானால்
சொல்லாதே அவர்களிடம் -
நான் ஒரு துப்பாக்கிக் குண்டைத்
தடுத்து நிறுத்தினேன் என்று
நான் ஒரு துரதிர்ஷ்ட சாலி என்று.
இதை மட்டும் சொல்:
கடலுக்கு அப்பால் உள்ள
அந்தச் சோகம் நிறைந்த நாட்டில்
எனக்குத் திருமணமாயிற்று,
பெரியதொரு தட்டையான கல்
எனது மாமியார்,
புதிய கூழாங் கல் சகோதரர்கள்,
கரிசல் மண் எனது மணப் பெண்.

ஆங்கிலம் வழித் தமிழில்: எஸ்.வி. ராஜதுரை வ.கீதா

15ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டைத் துருக்கியர்கள் வென்று தமது ஆட்சிக்குள் கொண்டு வந்த பிறகு அவர்களை எதிர்த்துப் போராடி மலைப் பகுதிகளில் ஒரு சிறிய சுதந்திரப் பிரதேசத்தை உருவாக்கிய கிரேக்கனொருவனின் பெயர் க்ளெஃப்ட்(Klepht).அவன் உருவாக்கிய விடுதலைப் போராட்டத்திலிருந்து பிறந்த கவிதை இது.

நன்றி - நூலகத்திட்டம்





# 'நீ சொன்னால் காவியம்'

"அம்பாறையில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லீம் மக்களால் இனக்கலவரம் மேற்கொள்ளப்பட்டது. அதனால் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் முஸ்லீம்களுக்கு எதிராக இனப் படுகொலை நடாத்துவார்கள். அதனைத் தவிர்க்கவே யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றினோம்." இவ்வாறு கருத்துப்பட சமீபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரான திரு. வே. பிரபாகரன் அவர்களால் பி.பி.சிக்கு பேட்டிய ளிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஒரு இனக் கலவரம் மேற்கொள்ளப்படுமாயின் அதனைக் கட்டுப் படுத்த முடியாத தங்களது பலவீனத்தை முதன் முறையாக வெளியுலகிற்கு முன் ஒப்புக் கொண்டிருக்கிறார் தலைவர்.
ஆனால் இதை நாங்கள் நம்பப் போவதுமில்லை; இது எங்களது பிரச்சினையுமல்ல.

இதுதான் பிரச்சினை என்றால், தலைவர் அவர்களே, யாழ்ப்பாணம் எப்பொழுது தங்களது கட்டுப்பாட்டிற்குள் வரப் போகிறது? பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்த முஸ்லீம் மக்களை எப்பொழுது மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியேற்றப் போகிறீர்கள்?
இத்தகைய கேள்விகள் ஒரு புறம் இருக்கட்டும். உண்மையில் நடந்தது என்ன?

1990 ஜுனில் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் உறவெல்லாம் அற்றுப் போய், தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ அடக்குமுறையை சிறீலங்கா அரசு மேற்கொண்டது. கிழக்கு மாகாணத்தில் இது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது வடமாகாணத்தில் பெரும்பாலான பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில், வான் வெளித் தாக்குதல்களும், கடல் மார்க்கமான தாக்குதல்களும் தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லீம் மக்களையும் அழித்தன. உதாரணமாக கோட்டையைக் கைப்பற்ற புலிகள் எடுத்த நடவடிக்கையும், அதனை எதிர் கொண்ட நடவடிக்கைகளும் நிறைய மக்களின் உயிரிழப்புகளுக்குக் காரணமாயின.

இத்தகைய காலகட்டத்தில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளராக இருந்த பாப்பாஅவர்கள் திடீரென சாவகச்சேரிப் பிரதேசத்திலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேறவேண்டும் எனக் கட்டளையிட்டார். அதற்கு சாவகச்சேரியில் சொல்லப்பட்ட காரணம் ஒரு சில முஸ்லீம்கள் உளவு வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். அதனால் அவர்களை வெளியேற்றுகிறோம் என்றனர். ஆனால் அவர்கள் உளவு வேலையில் ஈடுபட்டார்கள் என்பதற்கான எத்தகைய ஆதாரமும் மக்கள் முன் வைக்கப்படவில்லை.

முஸ்லீம் மக்களில் சிலர் உளவு வேலையில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தமிழ் மக்களில் சிலர் சந்தேகித்த போதிலும்,முழு முஸ்லீம் மக்களையும் சாவகச்சேரியிலிருந்து வெளியேற்றுவதனை அவர்கள் ஏற்கவில்லை. அம் மக்கள் அப்பொழுது கேட்ட கேள்வி இதுதான்: " தமிழ் மக்களில் சிலரும் உளவு வேலையில் ஈடுபடுகிறார்கள். அதற்காகத் தமிழ் மக்களையும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றுவார்களா?"

அடுத்து கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். சாவகச்சேரிப் பகுதியிலிருந்தும், கிளிநொச்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களை வவுனியாவிற்கு அப்பால் போகும் படியே பணித்தனர்.

இவற்றின் உச்சக் கட்டமாகவே யாழ்ப்பாண நகரிலிருந்து முஸ்லீம் மக்களின் வெளியேற்றம் அமைந்தது.

ஒருநாள் மத்தியானம் இரண்டு மணிக்குச் சற்றுப் பின்பாக யாழ்நகரிலுள்ள முஸ்லீம் பிரதேசம் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டது. அனைத்து முஸ்லீம் மக்களையும் பள்ளிவாசலில் கூடச் சொன்னார்கள். இன்று இரவுக்கிடையில் அனைவரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றார்கள். இருநூறு ரூபா பணம் மாத்திரமே எடுத்துச் செல்லலாம் என்றும், நகைகள், பெறுமதியான பொருட்கள் யாவற்றையும் விட்டுச் செல்ல வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டது. அவர்கள் ஆமென்றார்கள்.

**காலாதி காலமாகக் குந்தி இருந்த நிலத்தில் இருந்து அவர்கள் துரத்தப்பட்டார்கள்.**
அர்த்தமேயில்லாத வெறும் சொற்களினால் இந்தக் கொடுமையை உணர்த்த முடியவில்லை. **''தேசியத் தற்கொலை''** என்றது சரிநிகர். **இருபதாம் நூற்றாண்டின் நவீன காட்டுமிராண்டித்தனம்** என்றார் ஒரு தமிழ் மகன். என்ன பெயர் சொல்லி அழைத்த போதிலும், முஸ்லீம் மக்களின் முன்னால் தமிழ் மக்களின் தலை குனிவதனை ஒருவராலும் தடுக்க முடியவில்லை.
யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களுக்கு இது பெரும் அதிர்ச்சி

பெண் புலிகள் முஸ்லீம் பெண்களை நிர்வாணமாக்கிக் கூட சோதனையிட்டார்கள். முஸ்லீம் மக்களால் சிறு துணுக்குச் சொத்துக் கூட தமிழீழத்தை விட்டு வெளியே றுவதைத் தடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

அன்று கேரதீவு - சங்குப் பிட்டிப் பாதை தமிழ் மக்களுக்காகத் திறக்கப்படவில்லை. மாலையிலிருந்து அடுத்த நாள் காலை வரை யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

தற்போது யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டு வீதியில், வெலிங்டன் தியேட்டருக்கு அயலில் பழைய கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் '' சுத்தத் தமிழ்ப் பெயரான'' எழிலகத்தில் முஸ்லீம் மக்களின் சொத்துக்கள் பொருட்களாக மாறி விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

வெளியேற்றப்பட்டோர்கள் தாண்டிக் குளத்திற்கு அப்பால் அகதிகளாகி அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

சரி,நல்லது. தலைவர் அவர்களே, யாழ்ப்பாணம் எப்பொழுது தங்களது கட்டுப்பாட்டிற்குள் வரப் போகிறது? முஸ்லீம் மக்களை எப்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியேற்றப் போகிறீர்கள்?

**மாதவன்**

# புலிகள் தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும்

**-மருதூர்க்கனி**

பி.பி.சி நிருபருக்கு புலிகள் தலைவர் பிரபாகரன் அளித்த பேட்டியில் முதற்தடவையாக முஸ்லீம்கள் பற்றிய தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். '' முஸ்லீம்கள் தனியான கலாசாரத்தையும் தனித்துவத்தையும் கொண்டவர்கள். அவர்களின் தனித்துவமும் நில உரிமையும் பாதுகாக்கப்படும். தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ்வதன் மூலம் அவர்களின் சமூக, பொருளாதார வாழ்வு சிறப்பாக இருக்கும்'' என்று அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.
தமிழ் - முஸ்லீம் உறவுகளை மீண்டும் கட்டி எழுப்பவும், தமிழ் - முஸ்லீம் சமூகங்கள், பரஸ்பரம் தமது உரிமைகளை மதித்து ஏற்றுக் கொண்டு வாழவும் இந்த நிலைப்பாடு ஓர் அடிப்படையாக அமையக்கூடும் என்று, புலிகளின் தலைவர் நினைக்கலாம்.

அந்தப் பேட்டியில், '' சிங்கள இனவாதிகளும், சுயநலன் மிக்க முஸ்லீம் அரசியல்வாதிகளுமே தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்குமிடையே வேறுபாட்டைப் பெரிதாக்கிப் பகையை உருவாக்கினார்கள்'' என்று கூறப்படும் கருத்தை முஸ்லீம்கள் முற்றாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் முஸ்லீம்களுக்கு எதிராக செய்வதை எல்லாம் செய்துவிட்டு அதை சிங்கள இனவாதிகளின் தலையில் மாத்திரம் போடுவது புலிகளின் மரபாகவும் பாரம்பரியமாகவும் இருந்து வந்திருக்கின்றது.



'அன்பாக அனுப்பி வைத்தார்களோ'

தமிழ் - முஸ்லீம் சமூகங்களின் பொது எதிரியான சிங்களப்பேரினவாதமும் அவர்களின் சுயநலன் மிக்க முஸ்லீம் அரசியல்வாதிகளும், தமிழ் - முஸ்லீம் வேறுபாட்டை விரிசலடையச் செய்து குறிப்பாக கிழக்கில் தமது நலன்களை வளர்க்கவும் அவற்றைக் காப்பாற்றவும் நினைத்திருக்கலாம். அதை உற்சாகப்படுத்துவது போல் ''தேன்நிலவுக் காலத்தில்'' புலிகள் அவர்களோடு கூடிக் குலாவியதை நாடும் உலகமும் இன்னும் மறக்கவில்லை. ஆனால், புதிய தலைமுறையைச் சேர்ந்த முஸ்லீம் அரசியல் தலைமைத்துவம், ஒரு போதும் சிங்களப் பேரினவாதத்தின் பசிக்கு இரையாகியதில்லை. இரையாகப் போவதுமில்லை. முஸ்லீம் அரசியற் தலைமைத்துவத்தை புரிந்து கொள்ளாமல் முஸ்லீம்களின் உணர்வுகளை மதிக்கத் தெரியாமல் சகோதர முஸ்லீம்களைப் பகைத்துக் கொண்டவர்கள் யார்?
தமிழ் மக்களுக்கு எதிரான, சிங்களப் பேரினவாதத்துடன் மோதுவதற்காக, முஸ்லீம் சிறுபான்மைச் சமூகத்தைப் பாவித்துவிட்டு, முஸ்லீம்களை அடக்கி ஒடுக்கி ஆளுவதற்காக, தமிழ்ப் பேரினவாதத்தை, முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிராக அவிழ்த்து விடும் தமிழ்ப் பேரினவாதிகளின் முயற்சிகளை, முஸ்லீம் சமூகம் இன்று நன்றாக ஜீரணித்திருக்கிறது.
ஏறாவூர் சதாம் ஹூசைன் கிராமம், காத்தான்குடி பள்ளிவாசல், அழிஞ்சிப் பொத்தானைக் கிராமம், பொலநறுவ - பள்ளித்திடல், பங்கறான, அக்பர்புர, நிபர்ய்புர எல்லைக் கிராமங்கள், சாய்ந்தமருதுச் சந்தை... இவற்றில் நடந்த படுகொலைகளுக்கும், இது போன்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எத்தனையோ படுகொலைச் சம்பவங்களுக்கும் யார் காரணம்?
''இவைகளெல்லாம் சிங்கள இனவாதிகளின் திட்டமிட்ட வேலைகள்'' என்று இன்னும் மூடிமறைத்து முஸ்லீம் மக்களின் கண்ணில் மட்டுமல்ல, தமிழ் மக்களின் கண்ணிலும், உலகத்தின் கண்ணிலும் மண்ணைத் தூவவா புலிகள் நினைக்கிறார்கள்?
இவ்வாறு இனியும் செய்து கொண்டு, தமிழ் - முஸ்லீம் உறவுகளை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. முஸ்லீம்களின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளாமல், இணைப்பை நிரந்தரமாக்கவும் முடியாது. ''முஸ்லீம் கள் ப.ற்றிய புலிகளின் இன்றைய நிலைப்பாட்டை''. முஸ்லிம்கள் நம்ப முடியாமலும் போய்விடும். ''யாழ்ப்பாணத்திலும் அப்போது தமிழ் - முஸ்லீம் கலவரம் பரவும் அபாயமிருந்தது.

8

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணம் இன்று - 1

## இப்பொழுது பனைமரங்கள் முறிகின்றன

வலிமை வாய்ந்த பனை மரங்கள். ஆறு கிடையாது; குளம் கிடையாது. மலைகள் கூட இல்லை. தாராளமாகக் கடல் உண்டு. புகையிலையும் வெங்காயமும் செழித்த பிரதேசம். கல்வி கடலெனப் பெருகும். வீட்டைச் சுற்றிலும் கிடுகு வேலி. வேலியில் கிழுவை. வேலியைப் பிரித்து அயல் வீட்டில் புதினம் பார்க்கின்ற சராசரி மனிதர்கள்.

**இப்பொழுது பனைமரங்கள் முறிகின்றன.**

இதுதான் யாழ்ப்பாணம். எனக்குத் தெரிந்த யாழ்ப்பாணம்.

உண்மையில், வன்னியின் மரை இறைச்சி வத்தலும், மான் தோலும் தேனும் எனக்குத் தெரியாது. மட்டக்களப்பின் முந்திரிப் பருப்பும், மீனும், பாசிக்குடாக் குளிப்பும் நான் அறியேன். மட்டக்களப்புப் பெண்கள் அழகானவர்கள் என்றும் சொல்கிறார்கள். எனக்குத் தெரியாது. கோணமலையை நான் கண்டதில்லை. வெந்நீர் ஊற்றின் அருமையான குளிப்பும் எனக்குத் தெரியாது. (தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.)

எனக்குத் தெரிந்ததெல்லாம் பனங்கொட்டை. மாம்பழம் கூட அறியேன். பனங்கொட்டையைப் பற்றி நிறையச் சொல்வேன். பனங்கிழங்கு பற்றி இன்னும் சொல்வேன். பனங்கள்ளு பற்றி அதிகம் சொல்வேன்.

இப்பொழுது யாழ்ப்பாணம் இருண்ட கண்டம். மின்சாரம் இல்லாததனால் மாத்திரமல்ல. யாழ்ப்பாணம் உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. அதன் உண்மை நிலை ஒன்றும் வெளித் தெரியவில்லை. கொடூரம் நிறைந்த புலிகள் மாத்திரமே அங்கு வசிக்கிறார்கள் என்பதே வெளியில் சொல்லக் கேள்வி. அங்கு புலிகளும் வசிக்கிறார்கள் அவ்வளவுதான். ''ஆறுகள் இல்லை; ஏறி உயர்ந்த மலைகள் இல்லை. ஆயினும் என்ன, இருந்தன தோள்கள்.'' என்று கூறி வாழ்கிற மக்கள் இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியுமோ என்னவோ, நிலவின் பெறுமதி யாழ்ப்பாணத்தில் தான் உணரப்படுகிறது. நிலவு எத்தனை மணிக்கு உதிக்கும்; எத்தனை மணிக்கு மறையும் என நிலவின் வெளிச்சம் கணித்துப் பயணம் செய்கிறார்கள் மக்கள். கொழும்பிலும், ஒஸ்லோவிலும், பாரிஸிலும், லண்டனிலும் நிலவைக் கண்டாருண்டா? அதன் பெறுமதியை அறிந்தாருண்டா?

இந்த யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது? இங்கு வாழும் மக்கள் என்ன செய்கிறார்கள்? இவர்களின் மனநிலை எத்தகையது? குழந்தைகள் சந்தோஷமாகச் சீவிக்கிறார்களா? கள்ளன் பொலிஸ் விளையாட்டுப் போய், புலி - ஆமி விளையாட்டும் ஒழிந்து இப்பொழுது சிறுவர்கள் என்ன விளையாட்டு விளையாடுகிறார்கள்? இதெல்லாம் தெரியுமா?

''புல்ஸ்காப்'' பேப்பரிலும், பைல் மட்டையிலும், தினசரிப் பத்திரிகை அச்சிடுகின்ற கொடுமை எந்த நாட்டில் நிகழ்ந்திருக்கிறது? மரக்கறி எண்ணெயும், மண் எண்ணெயும் கலந்து ''ட்ராக்டர்'' ஓடும் புதினம் எங்கு கேள்விப்பட்டீர்கள்?

செவ்வரத்தம் இலைச்சாறும், பனம் பழச்சாறும், சாம்பலும் கலந்து உடுப்புத் தோய்க்கும் கலையை எங்காவது அறிந்தீர்களா?

இதுவெல்லாம் யாழ்ப்பாணத்தில் நடந்தது; நடக்கிறது; நடக்கப் போகிறது. அதனைக் கூறப் போகிறேன். யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்று சொல்லப் போகிறேன்.

1990 யூனில் மீண்டும் யுத்தம். காரணம் தெரியவில்லை. மக்கள் யுத்தம் நாளை முடியும் எனக் காத்திருந்தார்கள். ஒரு வாரம் சராசரி வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்.

பிறகு தான் உண்மை தெரிந்தது. இது ஓயப் போவதில்லை என்று அறிந்தார்கள் பிரச்சினைகள்



நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தது பிரச்சினைகள் பலதரப்பட்டன. வயிற்றுப்பாடு பெரும் பிரச்சினையானது. பனம் பழம் களவெடுக்கிற நிலை கூட இருந்தது. பட்டினிச் சாவு அதிகரித்தது. சைக்கிளில் வவுனியா சென்று உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து விற்பனை செய்தார்கள். பசி தீர்ந்தபாடில்லை. அரசாங்கம் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது. அவை புலிகளால் மறைக்கப்பட்டன. இவ்வாறு எழுதுவதனால் அரசு தமிழ் மக்களில கரிசனை கொண்டதென்றும் புலிகள் அதனை எதிர்க்கிறார்கள் என்றும் கருதத் தேவை இல்லை. அரசுக்கு உலக நாடுகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய தேவை உண்டு. ஆனால் புலிகள் பட்டினிச் சாவை விரும்பினார்கள். அது அரசுக்கெதிரான விளம்பரம் என்று நினைத்தார்கள். புலிகளின் உணவு, சுகாதாரத்துக்கு பொறுப்பான ஒருவர் இந்நிலையில் மனமுடைந்து பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

இது ஒரு புறம்.

மறுபுறம் மக்களின் மனங்கள் சிதைந்து கொண்டிருந்தன. தோட்டம் இல்லை. வயல் இல்லை. கூலியாக வேலை செய்வதற்கு ஒன்றும் இல்லை. விறகு இல்லை. உணவுப் பொருட்கள் கிடையாது. சமைக்கவும் முடியவில்லை.

யாழ்ப்பாணத்துத் தெருக்கள் சைக்கிளால் நிரம்பி வழிந்தன. வியர்வை வழிய வெயில் பாராது ஓடித் திரிந்தார்கள்.

மலிவான பொருட்கள் தேடி, சங்கானையிலிருந்து சாவகச்சேரிவரை கூட ஓடினார்கள். சன்லைட் சவர்க்காரம் ஒன்று சுன்னாகச் சந்தையில் எழுபது ரூபா. திருநெல்வேலிச் சந்தையில் அறுபத்தைந்து ரூபா. இடையில் ஐந்து மைல்கள் வித்தியாசம் என்றாலும், ஐந்து ரூபாவுக்காக ஓடினார்கள்.

சிறுவர்கள் பெரிய மரங்களின் கீழ் சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். வேலியில் இப்பொழுது கிளுவை கிடையாது. வேலியே இல்லை. விறகாகிக் கொண்டிருந்தன. சின்னச் சின்னச் செடிகள் கூட வெட்டிக் காயப்போட்டு விறகாகிக் கொண்டிருந்தன.

ஒரு மனிதனால் சைக்கிளில் எவ்வளவு பாரத்தைச் சுமக்க இயலும்? ஆகக் கூடியது நூறு கிலோ என நான் நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் மனிதன் இரு நூறு கிலோவுக்கும் அதிகமான பாரத்தைச் சுமந்து ஒரு நாளில் நூறு மைலுக்கும் அப்பாலான தூரத்தைக் கடக்கிறான். இதில் ஒரு சோகம் சொல்லவா? நடுக்காட்டில் திடீரெனச் சைக்கிள் சில்லிலிருந்து காற்று இறங்குகிறது. அவன் என்ன செய்யலாம்? இரு நூறு கிலோவுக்கும் அதிகமான பாரம் சைக்கிளை உருட்ட முடியாது. சில்லு நெளிந்து விடும். என்ன செய்யலாம். கற்பனை செய்யுங்கள். கதை பிறக்கும்.

(வரும்)

அருணா பரமேஸ்வரன்

---

# ஒரு வார்த்தை எழுத விடு

## சுத்திச் சுத்தி.....

நண்பர் கடிதம் எழுதியிருந்தார்: திரும்பவும், திரும்பவும் **தேசிய கலை இலக்கியப் பேரவையின்** நூல் வெளியீடுகள் பற்றியே குறிப்புகள் எழுதுகிறேன் என்று. நானென்ன செய்ய? தேசிய கலை இலக்கியப் பேரவை மாத்திரமே நூல்களை வெளியிடுகின்றன; விழாக்களை நடாத்துகின்றன. மற்றைய அமைப்புகள் யாவும் அசைவற்று உறங்குகின்றன. பேரவையினர் வருடத்தில் பத்து நூல்களாவது வெளியிடுகிறார்கள். சந்தோசமாக இருக்கிறது. ஆனால் ஒரு குறை கவிதை என்று வெளியிட்டால் முருகையனும், சிவசேகரமும் தவிர வேறு ஒருவரும் கிடையாரோ? ஏனைய நூல்களும் அவ்வாறு தான் ஒரு சிலர் எழுதியவையே மீண்டும் மீண்டும் வெளியிடப்படுகின்றன. ''சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லேக்கை...'' வேறு பலரதும் நல்ல படைப்புகள் உள்ளன. தேசிய கலை இலக்கியப் பேரவையினர் இதனைக் கவனத்தில் எடுப்பார்கள் என நம்புகிறேன். இன்னொரு விடயம்- நூலின் அட்டை, அமைப்புகள் அழகுற வெளிவருகின்றன. என்னவோ 84,85,86ஆம் ஆண்டுகளில், நாளுக்கொரு சஞ்சிகையோ, நூலோ வெளிவந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறேன். யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்னால் மணியண்ணையின் புத்தகக்கடையில், தொங்கி இருக்கும் சஞ்சிகைகளை, அடுக்கிஇருகிகும் நூல்களை எவ்வளவு ஆவலுடன் தட்டிப்பார்போம்? அந்தக்காலம் இனி வராதா?

## தொலைவும் இருப்பும்

நண்பர் **யேசுராசா** திருமணம் செய்தார் எனும் செய்தி கனடாவிலுள்ள நண்பர் ஒருவர் எழுதித் தெரிய வந்தது. சந்தோசம், யேசுராசாவிற்கு வாழ்த்துக்கள். அவரது சில போக்குகள் இனி மாறலாம். சில நல்ல சிறுகதைகளையும், சில நல்ல கவிதைகளையும் படைத்துள்ளார் எபதைத் தவிர, ஈழத்துக் கலை இலக்கியச் சூழலில் அவருக்கு அறிமுகம் வேறு வகையில் கொடுக்கலாம். நல்ல சினிமாக்கள், ஓவியங்கள், சிற்பங்கள், நாடகங்கள் ஆகியவற்றில் அவருக்குள்ள பரிச்சியம் குறிப்பிட வேண்டியது. கொழும்பில் திரைப்பட விழாக்கள் நடைபெறுகிற போது யேசுராசாவை நினைக்க வேண்டியிருக்கிறது. **அ.மார்க், கோ.கைலாசநாதன்** போன்ற ஓவியர்களை யேசுராசா மூலம் தான் அறிந்தோம். **விசுவலிங்கம்** எனும் சிற்பக் கலைஞரும் அவ்வாறே. யாழ். திரைப்பட வட்டத்தினுடாக நல்ல சினிமாக்களுடனான பரிச்சியத்திற்கு யேசுராசா காரணம். யேசுராசா பற்றிச் சொல்வதற்கு இன்னும் நிறைய உண்டு. ஆனால் யேசுராசா பற்றி மறுபக்கத்தில் ஒன்று சொல்லலாம். யேசுராசா பல வழிகளில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அதனை இப்பொழுது சொல்ல வேண்டும். அல்லது காலம் தூக்கி எறியப் போகிறவர்களில் இவரும் ஒருவராகி விடுவார்.

## மக்கத்துச் சால்வைக்குப் பரிசு


நண்பர் எஸ். எல். எம். ஹனீபா பற்றியும் ஒரு செய்தி சொல்ல வேண்டும். சந்தோஷமாக இருந்தது. கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் '' சுபமங்களா '' எனும் தரமான சஞ்சிகை '' லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசுகள் திட்டம் '' எனும் அமைப்பினூடாக சிறுகதை நூல்களுக்குப் பரிசு வழங்குகின்ற போது 'நம்ம ஹனீபாவுக்கும்' ''மக்கத்துச் சால்வை'' சிறுகதைத் தொகுப்புக்காக கிடைத்துள்ளது ஒரு சந்தோசம் கிடைக்க வேண்டிய நூல்தான் இது. மக்கத்துச் சால்வை பற்றி சரிநிகர் இதழ் 19 இல் இதே பக்கத்தில் இதே இடத்தில் எழுதியிருக்கிறேன். வாசகர்களே இன்னொரு முறை வாசித்துப் பாருங்கள்.

சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# அவர்களுக்கு உள்ளதெல்லாம் அகதி முகாம்கள் பொம்மர் குண்டுகள் ஏஜென்சிகள், பட்டினி இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்த அரசியல் கட்சிகளின் பசப்பல்கள்








லண்டன் பி.பி.சியில் அடுத்தடுத்து ஒலிபரப்பாகிய பிரபாகரன், ஜனாதிபதி ஆகியோரின் பேட்டிகள் ( உண்மையில் பின்னையது ஒரு நேரடி உரையாடல் ஆகும் ) கொழும்புப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளன. பிரபாகரனுடைய பேட்டியில் தாயகப் பிரதேச அங்கீகரிப்புடன் கூடிய ஒரு சமஷ்டித் தீர்வு அரசினால் முன்வைக்கப்படுமானால் அதைப் பரிசீலிக்க நாம் தயார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கூடவே பாராளுமன்ற தெரிவுக் குழுவினை தமிழ் மக்கள் நம்பவில்லை என்றும் அது பெரும்பான்மை சிங்களக் கட்சிகளின் கருத்துக்களையே பிரதிபலிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதியிடம் ஒரு நேயர் கேட்ட போது முழுப் பொறுப்பையும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விட்டு விட்டு வெறும் 2/3 பெரும்பான்மை இருப்பின் மட்டுமே ஒற்றையாட்சி முறையை மாற்றியமைக்க முடியும் என்று கூறி முடித்து விட்டார். அவர் தாம் அரசியல் தீர்விலேயே நம்பிக்கை வைத்துள்ளதாக வேறு திரும்பவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவோ சிறீநிவாசன் முன் வைத்த கோரிக்கைகளைக் கூட முற்றாக ஏற்காமல் ( அவை எவ்வகையிலும் தமிழ் மக்களின் நலன்களின் மீதான அக்கறையுடன் முன் வைக்கப்பட்டவையல்ல. ) அதில் தெரிவிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரிப்பை மட்டும் எடுத்துக் கொண்டு தனது இடைக்கால அறிக்கையை வெளியிட்டுள்ளது. பிரபாகரனே சொன்னது போல அரசு சார்பு தமிழ்க் கட்சிகளால் கூட ஏற்றுக் கொள்ள முடியாத இந்தத் தீர்வைக் காட்டி ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு இந்தப் பேட்டி மூலம் தெரிவித்ததெல்லாம் வெறும் 'பெப்பே' தான் என்பதைத் தவிர வேறென்ன? அண்மையில் அறிவிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்துக்கு முழு ஆதரவையும் தெரிவிக்கத் தயார் என அறிவித்துள்ள முஸ்லீம் காங்கிரஸ் கூட இந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. '' பெரும்பான்மையின் முடிவுகளை தமிழ் முஸ்லீம் மக்களின் மீது திணிக்கும் ஒரு முயற்சியே இது '' என அது அறிவித்துள்ளது.

உண்மையில் இந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவை முக்கியமானதாகக் கருதி மதித்து ஏதாவது அக்கறையுடன் இதுவரை கருத்துக்களை யாராவது முன் வைத்துள்ளார்கள் என்றால் அது சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளே அன்றி வேறு யாருமல்ல ஏகப்பட்ட பொருள் மற்றும் நேரத்தை விரயமாக்கி உலகம் முழுவதினதும் கண்களில் மண்ணைத் தூவ என்று நடாத்தப்படும் இந்தத் தெரிவுக் குழுவினை அதில் பெரும்பான்மை அங்கம் வகிக்கும் இரண்டு பெரும் கட்சிகளும் கணக்கெடுக்கவே இல்லை. இன்று வரை அவை அதன் முன் ஒரு தீர்வைக் கூட முன் வைத்ததில்லை. முன் வைக்கும் தீர்வுகளை தமக்குத் தெரிந்த இனவாத அடிப்படையுடன் விமர்சிக்க மட்டுமே செய்துள்ளன. எல்லாம் தரத் தயார் என்று வாய் ஓயாது குறிப்பிடும் ஜனாதிபதி அவர்கள் இன்று வரை தன் கட்சி ஒரு யோசனையை முன் வைக்க வேண்டுமென்று தெரிவித்தது கூட இல்லை. மாறாக திருகோணமலையிலும், அம்பாறையிலும் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டு நடாத்தப்படுவதை பார்த்துக் கொண்டும், வடகிழக்கில் யுத்தத்தை தொடர்ந்து நடாத்திக் கொண்டும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தான் தீர்க்க முயற்சி எடுத்து வருவதாக பறைசாற்றி வருகிறார். திருகோணமலை குடியேற்றம் தொடர்பாக பேசிய எமது தமிழ்த் தலைவர்கள் '' பேச்சு வார்த்தை சுமுகமாக முடிவடைந்தது '' என்று அறிவித்ததுடன் தமது கடமை முடிவடைந்து விட்டதாக வாழாது இருக்கின்றனர்.

பி.பி.சி பேட்டியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள பதில்கள் மிகவும் கேலிக்குரிய விதத்தில் உண்மைகளை மூடி மறைத்துள்ளன. அரசியல் கைதிகள் பற்றிய கேள்விக்கு அவர் அப்படி ஒன்றும் இல்லை என்ற விதத்தில் பதில் அளித்துள்ளார். சரி அப்படியானால் கடந்த மூன்று வருடங்களாக நண்பர் குகமூர்த்தியை எங்கே வைத்திருக்கிறார்கள்? இவர் அரசியல் கைதி இல்லையென்றால் பயங்கரவாதியா? பயங்கரவாதி என்றால் எந்தப் பயங்கரவாதி? புலியா? அல்லது ஜே.வி.பியா?



ஜனாதிபதியின் பேட்டியில் மட்டுமல்ல பிரபாகரனுடைய பேட்டியிலும் இப்படிப்பட்ட விடயங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் முஸ்லீம் மக்கள் தொடர்பான விளக்கம். செய்த அக்கிரமத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டு அம் மக்களிடம் மன்னிப்புக் கேட்கத் தயார் இல்லாதவர். முஸ்லீம்களை வெளியேற்றியதற்கு பரவலாக எழுந்துள்ள எதிர்ப்பின் காரணமாக ஒரு சப்பைக் கட்டு கட்டியுள்ளார்.



காலங்காலமாக யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து தமிழைத் தவிர வேறு மொழியையே பேசி அறியாதவர்களான, தமிழ் மக்களுடன் எந்தவித முரண்பாடுகளும் இன்றி வாழ்ந்தவர்களான யாழ்ப்பாண முஸ்லீம்களை கிழக்கு மாகாண கலவரம் ஒன்றைக் காரணம் காட்டி வெளியேற்றியதாக கூறுவதற்கு பிரபாகரனை விட வேறு யாருக்கும் நா எழாது. அவர்களது உடமைகள் அனைத்தையும் பறித்துக் கொண்டு செலவுக்குப் பணம் எடுத்துச் செல்லக் கூட அனுமதிக்காமல் விரட்டியதை பாதுகாப்புக்காக போகச் சொன்னதாகச் சொல்வது யாரைத் திருப்திப்படுத்தும்? வெறும் பி.பி.சி பேட்டியாளரை மட்டுமா? ( அவரைக் கூட அது திருப்திப்படுத்துமா என்பது சந்தேகமே? )

அப்போது விரட்டப்பட்ட முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு கொடுத்த தமிழர்களில் எத்தனை பேர் புலிகளால் தண்டிக்கப்பட்டார்கள் என்பது இன்று ஊர் அறிந்த கதையல்லவா. முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முடியுமா?

உண்மையில் இப்போது பிரபாகரன் செய்திருக்கவேண்டியது சப்பைக் கட்டு கட்டுவதல்ல. பகிரங்க மன்னிப்புக் கோருவது, சண்டை ஓயும் வரை பொறுத்திராமல் உடனடியாக மீள வந்து குடியேற முஸ்லீம் மக்களை அனுமதிப்பது என்பவையே.

ஆனால்........

இன்னுமொரு பேட்டியையும் பி.பி.சி எடுத்திருந்தது. பலரது கவனத்தை ஈர்க்காத இந்தப் பேட்டியை அளித்தவர் ஜனாதிபதி அவர்களால் அன்பாகத் 'தம்பி' என அழைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா; ஈ.பி.டி.பியின் தலைவர். அவரது பேட்டியில் ஒரு மகத்தான உண்மை தெரிவிக்கப்பட்டுள்ளது. '' இங்கு வாழும் சகல மக்களதும் தாய்நாடு இலங்கை '' என்பதே அந்த உண்மையாகும். இந்தத் தகவலைத் தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிச்சயம் அறிந்திருக்கக் கூடிய உண்மை '' இது உங்களது நாடு அல்ல என்ற சிங்களப் பேரினவாதத்தின் நடைமுறைரீதியிலான 'விளக்கத்திற்கு' பிறகு தான் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கை தமது தாயகம் என்று உணரத் தொடங்கினார்கள் என்பது. டக்ளஸ் அவர்கள் இது சகல மக்களதும் என்று சொல்லாமல் '' தமிழ் மக்களது தாய்நாடு இலங்கை '' என்று உரத்துச் சொல்லியிருக்கலாம். அப்போது '' இல்லை சிங்களவர்களது மட்டுமே '' என்று அவர் காது செவிடுபட அவர் இன்று நம்பிக்கை வைத்துள்ள யு.என்.பியினரே அவருக்கு இடித்துரைத்திருப்பார்கள்.

வடக்கு கிழக்கில் மட்டும் திட்டமிட்ட குடியேற்றம் தமிழ் மக்களை கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மையினர் ஆக்கும் பிற நடவடிக்கைகள் என்று இயங்கும் இந்த அரசிடம் '' தமிழ் மக்களினதும் தாயகமான '' இலங்கையில் தமிழ் மக்களுக்காக மாதிரிக்கு அரச உதவியில் ஒரு குடியிருப்பை வழங்கும் படி அரசிடம் சிபாரிசு செய்ய திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு முடியுமா? நிலமற்ற தமிழர்களுக்கு அரசு குறைந்த பட்சம் தமிழ் பகுதியில் - இன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடக்கும் திருகோணமலையிலாவது அதை நிறுத்தி ஒரு தமிழ்க் குடியேற்றத்தை நடாத்த முடியுமா? திரு. டக்ளஸ் அவர்களது கட்சியின் மேற்பார்வையில் இயங்கும் கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் கடந்த மூன்று ஆண்டுகளாக உள்ள தமிழர்களுக்கு ஒரு நிரந்தரக் குடியிருப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசிற்கு சிபாரிசு செய்ய முடியுமா?

'' எல்லாரது நாடு '' என்பது எப்படிப் பயன்படுத்தப் படுகிறது என்பது ஈ.பி.டி.பிக்கு விளங்காமல் போகலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு அது நன்றாகவே தெரியும். தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்ளவும், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமே அல்ல என்று ஆக்கவும் மட்டுமே அது பயன்படுத்தப்படுகிறது. இந்த எல்லா மக்களுக்குமான இலங்கையில் தமிழ் மக்களுக்கு என்ன இடம் என்பதை அறிய வேண்டுமானால் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது அடையாளத்தை மாற்றிக் கொண்டு ஒரு தடவை - ஓர் உதாரணத்திற்காக - இலங்கைப் பொலிஸிடமோ, இராணுவத்திடமோ பிடிபட்டுப் பார்க்க வேண்டும். அல்லது சிங்களப் பேரினவாதிகள் என்ன சொல்கிறார்கள் என்று கூர்ந்து கவனிக்க வேண்டும். ( நேரம் கிடைக்குமானால் திவயின சிங்களப் பத்திரிகையை ஒரு மாதம் தொடர்ந்து படிக்கலாம். )

ஆக எல்லோரும் ஒன்றுதான். அவர்களுக்கு வாய்ப்பிருக்கிறது; வசதி இருக்கிறது; பேட்டி காண பி.பி.சி இருக்கிறது. யுத்தத்துக்குள் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்குமோ? பாவம் அவர்கள். அவர்களுக்குள்ளதெல்லாம் அகதி முகாம்கள், பொம்மர் குண்டுகள், ஏஜென்சிகள், பட்டினி. இவை எல்லாவற்றையும் விட மேலாக இந்தக் கட்சிகளதும் அரசியல்வாதிகளதும் பசப்பல்கள்.

கோசமறிப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
6, அலோ சாலை
கொழும்பு-3

## பல சோலி உங்களுக்கு எங்களுக்கோ?

மாகாண சபைகள் கலைக்கப்பட்டு விட்டன. தேர்தல்கள் மே மாதம் இறுதிப்பகுதியில் நடந்தேதீரும் என்று அறிவித்து விட்டார் ஜனாதிபதி. தேர்தல்கால தயாரிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. திடீர் ஐக்கிய முன்னணிகள், திருவிழாக் காலக் கடைகள் போல திறக்கப் பட்டு விட்டன.

மாகாண சபையின் யு.என்.பி.வேட்பாளர்கட்கு இடப்படும் ஒவ் வொரு வாக்கும் தனக்கு இடப்படும் வாக்காகக் கருதி வாக்களிக்கு மாறு அறிவித்ததன் மூலம் தேர்தல் பிரச்சாரத்தையும் ஆரம்பித்து வைத்துள்ளார் ஜனாதிபதி.

தேர்தலுக்கான முயற்சிகளிலும் அதைக் கண்காணிப்பதற்கான குழுக் களை நிறுவுவதிலும் கட்சிகள் காட்டுகின்ற தீவிரத்தை பார்க்கும் போது நம்பத்தான் முடியவில்லை.

இந்தக் கட்சிகளாலும் இவ்வளவு வேகமாக இயங்கமுடியுமா என்று சந்தேகம் கொள்ளுமளவுக்கு வேகம்.

தமிழ்க்கட்சிகளுக்கு இந்தத் தேர்தல் அவ்வளவுக்கு முக்கியமான ஒன் றல்ல என்ற போதும் ஈ.பி.ஆர்.எல்.எப். நவசமசமாஜ கடசியுடன் கூட்டுச் சேர்வதாக அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கிலோ தொடர்ந்து சண்டை. இப்போது ருஷ்ஷிய அதி விசேட போர்க் ஹெலிகப்டர்களும் வந்து சேர்ந்துள்ளன. தேங்காய் விலை, அரிசி விலை, மண்ணெண்ணை விலை என்பன ஸ்ரீ லங்கா அரசின் பொம்பர் விமானம் பறக்கும் உயரத்துக்கும் மேலே போய்விட் டன.

சாப்பாட்டுக்கு முருங்கை இலை கூட இல்லாத நிலை அங்கு. உணவுப் பொருட்கள் வடக்குக் கிழக்குக்கு அனுப்பப்படுகின்றன. புலிகள் தான் அவற்றைப் பிடுங்கிக் கொள்கிறார்கள் என்று ஜனாதிபதி அவர்கள் பி.பி.சிக்கு தெரிவிக்கின்றார்.

புலிகள் பிடுங்கிக் கொண்ட விடயம் என்னவோ உண்மைதான் என்ற போதும், அரசாங்கம் ஒழுங்காக உணவுப்பொருட்களை அனுப்பி வருவதாக கூறுவது பச்சைப்பொய்.

யாழ் அரசாங்க அதிபர் கொழும்புக்கு வரும்போது உணவு அனுப்பு வது பற்றி பேசப்படும். அவர் போனதும் எல்லாம் அப்படியே கைவி டப்படும். குடாநாடு கிட்டத்தட்ட சோமாலியாவாகிக் கொண்டு வருகி றது. இது ஒரு புறமிருக்க, திருகோணமலையில் அரசாங்கம் தனது வழமையான திட்டமிட்ட குடியேற்றத்தை நடாத்த இரகசிய ஒத்து ழைபபு வழங்கி வருகிறது. தமிழர்களது நிலங்கள் இவ்வாறு பிடுங்கப்ப டுவது இங்கு யாருக்கும் முக்கியமானதாகப் படவில்லை.

ஸ்ரீ லங்கா அரசும் அதன் ஜனாதிபதியும் ஆடைத் தொழிற்சாலை திறப்பிலும் மணிக்கூட்டு கோபுர திறப்பு விழாவிலும் கவனம் செலுத்து கிறார்கள். பாராளுமன்ற தெரிவுக் குழு இணைப்பில்லாத தீர் வொன்றை தெரிவித்து விட்டு தன் பொறுப்பு இப்போதைக்கு தீர்ந்த தென ஆசுவாசப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளுக்கோ எத்தனையோ சோலிகள். தப்பித்தவறி இலங்கை அரசு வடக்கு கிழக்கிலும் தேர்தல் நடக்கும் என்று அறிவித் தால் அதற்கு தயாராக இருக்க வேண்டும் என்ற அவசரம். யார் யாரை தேர்தலுக்கு நியமிக்கலாம் என்று பட்டியல் போடும் சிக்கல்.

கிளாலிப் பாதையில் தப்பித்தவறி புலிகள் வந்தாலும் என்று சல்லடை போடவும், மட்டக்களப்பில் இலங்கை அரசுடன் சேர்ந்து நீதிகாக்கவும் உழைத்தல். பாராளுமன்றத்திற்குப் போய்வருதல். இப்படிப் பலசோலி கள் அவர்களுக்கு. புலிகளுக்கும் அப்படியே.

யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற விரும்புபவர்களுக்கு பாஸ் கொடுப்பது முதல், மிகக் கஸ்டப்பட்டாவது குடாநாட்டுக்குள் வரு கின்ற மண்ணெண்ணை பெரல்களை கொழும்பு விலைக்கு 'கொள்வன வு' செய்வது வரை ஆயிரம் பணிகள் அவர்களுக்கு.

எப்போதும் போல பட்டினிச் சாவு, மருத்துவ வசதி இன்மை, யுத்தக் கொடுமை என்று இன்னல்படும் மக்களுக்காக சிந்திக்க ஒருவருக்கும் நேரமில்லை. அக்கறைப்பட யாருமே இல்லாத நிலையில் தமிழர்கள். 'தந்தை செல்வா' இருந்திருந்தால் திரும்பவும் ஒரு முறை, கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லியிருப்பார். ஆனால் இப்போது அவர் இல்லை.

அவரது வழித்தோன்றல்களோ கொஞ்சம் நடைமுறையில் சிந்திப்பவர் கள்.

பொறுப்பை இந்தியாவிடம் விட்டுவிட்டவர்கள்; அல்லது துப்பாக்கியி டம்.

எமக்குத்தான் வழி புரியவில்லை.

## திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடரும் அரசியற் சதி

அண்மைக்காலமாக இலங்கை அரசின் குடியேற்ற நடவடிக்கை கள் நேரடியாகவும், மறைமுகமாக வும், திருகோணமலை மாவட்டத்தி லும், நுவரெலியா மாவட்டத்தி லுமே அதிகரித்து வருகிறது. திரு கோணமலை மாவட்டம் வடக்கை யும் கிழக்கையும் இணைக்கின்ற மாவட்டமாக இருப்பதனால் வடக்கு- கிழக்கு இணைப்பையும் அதன் வழி தமிழ்த்தேசிய இனத்தை இணைப்பதாகவும் அமைந்துள்ளது. திருகோணமலை யில் சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதன் மூலம் வடக்கு- கிழக்கு இணைப்பைத் தடுக்கலாம். அதனூடாக தமிழர்கள் ஒரு தேசிய இனமாக இணைவதனையும் தடுக் கலாம் என்பதையே அரசு நோக்கா கக் கொண்டுள்ளது.

நுவரெலியா மாவட்டம் மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற மாவட்டம். அம் மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்பவர்க ளும் மலையக தமிழ் மக்களே. இத னால் அம் மாவட்டத்தில் மலையை கத்தை மையமாகக் கொண்ட மலை யகத்தேசியம் ஒன்று வளர்ந்து வரு கறது. இத் தேசியம் தமக்கான ஒரு அதிகார அலகையும் கோரி வருகி றது. இத் தேசியத்தை வளரவிடாது சிதைப்பதற்காகவே இம் மாவட் டத்தில், குடியேற்றங்களை மேற் கொள்வதற்கு அரசாங்கம் முயல் கின்றது.

இம் மாவட்டங்களிலும் குடியேற் றங்களை மேற் கொள்ளும் போது பல வழி முறைகள் கையாளப்படு கின்றன. திருகோணமலைக்குடி யேற்றத்தில் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்கள், சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்கள், கைத் தொழில் குடியேற்றங்கள், வியாபா ரக் குடியேற்றங்கள், மீனவர் குடி யேற்றங்கள் என்பன ஆரம்பகா லம் தொட்டு பின்பற்றப்படுகின் றன குடியேற்ற வழிமுறைகளாக இருந்தன. தற்போது பதட்ட நிலை காரணமாக தமிழர்கள் வெளியே றிய இடங்களில் குடியேற்றல், கோவில் காணிகளில் குடியேற்று தல் என்கின்ற வழிமுறைகள் பின் பற்றப்படுகின்றன. அண்மையில் திருகோணமலை நகரிலுள்ள மரத் தடி, லிங்க நகர், சோனகத்தெரு, கோவில் பூமி, மட்டிக்களி, கூளா வடி, கரிஸ்தாவத்தை, நாகராஜா வளவு போன்றவற்றில் இவ்வா றான குடியேற்றங்கள் மேற்கொள் ளப்பட்டன. இப்பிரதேசக் காணி கள் பதட்ட நிலையால் இடம் பெயர்ந்த தமிழர்களும், இந்துக் கோவில்களுக்கும் சொந்தமான வையாகும். பௌத்த மதகுரு ஒரு வரின் மேற்பார்வையிலேயே இக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன. லவ்லேன் பகுதியில் சுய வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் பெற்றிருந்த தமிழர் கள், கலவரத்தைத் தொடர்ந்து இந் தியாவிற்கும், அகதிகள் முகாம்க ளுக்கும் சென்ற போது அவ்வீடுக ளிலும் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் மலை யக மக்களின் நிலத் தொடர்ச்சியை துண்டிக்கும் வகையில் நட்சா திட் டம், சுவர்ண பூமித்திட்டம், மகா வலி அபிவிருத்தித்திட்டம் போன்ற திட்டங்களினூடாகவும், தோட்டங்களை கிராமங்களாக்கல், பயிர் நிலங்களிலிருந்து வெளி யேற்றுதல், என்பவற்றினூடாக நேரடியாகவும், சட்ட விரோதக் குடியேற்றங்கள் மூலம் மறைமுக மாகவும், குடியேற்றங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. திரு கோண மலை குடியேற்றங்கள் போலவே, இங்கும் சட்டவிரோதக் குடியேற்றங்களுக்கு பௌத்த மத குருமாரே தலைமை தாங்குகின்ற னர். நுவரெலியா மாவட்டத்தில் மேற்கூறியவற்றை விட, மலைய கத் தமிழர் வாழ்கின்ற பிரதேசங் களை சிங்களப் பிரதேசங்களுடன் இணைத்தல் என்கின்ற வழிமுறை யும் பின்பற்றப்படுகின்றது. மாவட்ட ரீதியாக நடைபெறும் விகி தாசாரப் பிரதிநிதித்துவ தேர்தலில் மாவட்ட அரசியல் ஆதிக்கத்தை தங்கள் கைகளில் எடுப்பதற்கா கவே இவ் வழிமுறை பின்பற்றப்ப டுகின்றது. சிங்கள மக்களைக் கொண்ட தேர்தல் தொகுதியான வலப்பன தேர்தல் தொகுதி இதற்கா கவே நுவரெலியா மாவட்டத்து டன் இணைக்கப்பட்டுள்ளது. இத் தேர்தல் தொகுதி இணைக்கப்படா விட்டால் நுவரெலியா மாவட்டத் தின் அரசியல் ஆதிக்கம் மலைய கத் தமிழர் கைகளிலேயே இருந்தி ருக்கும். இணைப்பின் பின்பு ஒரு பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்வதில் கூட கஸ்டமான நிலையே ஏற்பட்டுள்ளது. 1989 தேர்தலில் தமிழர் ஒருவரும் தெரிவு செய்யப்படாமை யாவரும் அறிந்ததே.

- பரந்தாமன்

## சண்டே ஒப்சேவரின் சொறியல்

ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் அளித்த பேட்டி அர சாங்கத்தின் ஊதுகுழல்களான ஏரிக்கரைப் பத்திரிகைகளுக்கு எரிச்சலைக் கொடுத்துள்ளது. போலி இன ஐக்கியம் பேசும் இந் தப் பத்திரிகைகள் அரசை விமர்சிக் கின்ற பத்திரிகைகளையும், பத்திரி கையாளர்களையும் தொடர்ந்து ஜே.வி.பி. சார்பானவர்கள் என்றோ புலி சார்பானவர்கள் என்றோ முத்திரை குத்தி வருவது தெரிந்ததே. அதன் பார்வையில் லக்திவ, யுக்திய, ராவய பத்திரிகை கள் அனைத்தும்ஜே.வி.பியினரின் ஆதரவாளர்களால் நடாத்தப்படு பவை.

இப்போது கடந்த 28-03-93 ஞாயி றன்று வெளியான அதனது ஆங்கி லப் பத்திரிகையான '' சண்டே ஒப் சேவர் '' இதழின் மூன்றாம் பக்கத் தில் எழுதியவர் பெயர் கூடப் போடாமல் வெளிவந்த தனது செய் திக் குறிப்பொன்றில் சரிநிகரை புலி சார்புப் பத்திரிகை என்று முத்திரை குத்தியுள்ளது. ( இதே செய்திக் குறிப்பு அதன் சிங்களப் பத்திரி கையான '' சிலுமின '' விலும் வெளியாகியிருந்தது. )



THE SUNDAY OBSERVER, MARCH 28, 1993

Local

Ravaya Editor tells Sarinikar

'Tamils are justified in their struggle'

Victor Ivan, the Editor of the anti-UNP Sinhala tabloid Ravaya is prominently quoted in the pro-LTTE Tamil publication Sarinikar of March 22, 1993 as having stated that the Tamils are justified in their struggle for a separate State.

A former JVP[illegible] now a strong supporter of [illegible] group, espousing the LTTE cause has added that the state aided colonisation in the North-East has affected the Tamil people in the land policy.

The state-aided colonisation should not only stop forthwith but those colonies should be withdrawn", he has stated.

He has further urged the Sinhala people not to give their support for this type of State-aided colonisation.

The following is the statement quoted in the Sarinikar:

"The Tamil people thought of a separate Government for them after they found that the Government ruling this country is not representing the Tamil-[illegible]



தமிழ் மக்களின் நியாயமான உரி மைகளைப் பற்றிப் பேசுவது, அவர் களுக்கு இழைக்கப்படும் அநீதி களை விமர்சிப்பது, அரசின் வடக்கு கிழக்கின் மீதான யுத்தத் தின் போக்கை விமர்சிப்பது என் பவை புலி சார்பு நடவடிக்கைகள் எனவும், இப்படிச் செய்பவர்கள் புலிசார்பாளர்கள் என்றும் முத் திரை குத்தப்படுகிறது. இந்த ஜே.வி.பி, புலி முத்திரை குத்தல் கள் பத்திரிகைகளையும், பத்திரி கையாளர்களையும் ஒடுக்கத் திட்ட மிட்டு செய்து வரும் முஸ்தீபுகளே யன்றி வேறல்ல.

இப்போது சரிநிகர் மீது போகிற போக்கில் போடப்பட்டது போலக் கூறப்பட்ட இந்த முத்திரை குத்த லின் உள்நோக்கம் என்ன?

எந்த இடத்தில் சரிநிகர் புலிசார் பாக இருந்தது என்று இந்த ஏரிக் கரை ஊதுகுழலுக்கு நிரூபிக்க முடி யுமா?

இந்த ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் ஊதுகுழல்களாகவும், அதன் கொள்கைகளைப் பிரச்சாரம் செய் வதைத் தமது பணியாகவும் கொண்டு செயல்பட்டு வருபவை.

ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க தீவிர முயற் சியிலீடுபடுவதாகக் காட்டிக் கொள்

11

நன்றி - நூலகத்திட்டம்



# நன்மை அடையப் போவது சிங்களவர்களே தமிழர்கள் அல்ல



- கரவெட்டி ஜே. நடராஜா

வடக்கும் கிழக்கும் இணைந்த அல்லது வடக்குடன் கிழக்கிலுள்ள தமிழ்ப் பகுதிகள் இணைந்த ஒரு தமிழ் மொழி மானிலத்தை அமைப்பதற்கு சிங்களவூர்கள் மனம் இசைகிறார்கள் இல்லை என்றால் அதற்கு முக்கிய காரணம் தமிழர்கள் தமது இனவிகிதாசாரத்திற்கும் அதிகமான நிலத்தை அனுபவிக்க நினைக்கிறார்கள் என்று நினைப்பதும், முழு இலங்கையுமே சிங்களவர்களுக்கே சொந்தமானது என்று அவர்கள் தலைமுறை தலைமுறையாக நினைத்து வந்ததுமேயாகும். இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழரா சிங்களவரா என்று சரித்திரவியலாளரே குழம்பிக் கொண்டிருக்கும் போதும், சரித்திரம் தெரிந்த காலத்திலிருந்து இரு இனத்தவருமே வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்து கொண்டு, முதல் வந்தவர்களுக்குத்தான் நாடு சொந்தமாக வேண்டும் என்ற விவாதம் இந்த உலகில் எங்கும் நடைமுறையில் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டு தற்போதைய நிலைமைக்கேற்ப பிரச்சினையை அணுக அவர்கள் முன்வர வேண்டும்.

அடுத்ததாக தமிழர்கள் கேட்கும் வடக்கு கிழக்கு அவர்களுக்கு அதிகமானதா என்பதை ஆராய்ந்து பார்ப்போம். நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து காணிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டபோது வடக்கு கிழக்கிலுள்ள காணிகள் மாத்திரமே தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதேநேரத்தில் சிங்களப் பகுதிகளில் எந்தத் தமிழ்ச் சமூகத்திற்கும் நிலம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. அப்பொழுதிலிருந்தே வடக்கு கிழக்கு நிலத்தில் மாத்திரமே தமிழர்களுக்கு வாழ உரிமை உண்டு என்பதுவும், வடக்கு கிழக்கிற்கு வெளியே எந்த உரிமையுமே இல்லை என்பதுமே சிங்களவர் மனதில் இருந்து வந்துள்ளது.

வடமாகாணத்தின் நிலத்தின் வளத்தை ஆராய்ந்தோமானால் முழுநிலமுமே வரட்சியானது என்பது தெரிந்ததே. கிளிநொச்சி இரணைமடுக்குளம், வவுனிக்குளம் போன்ற சிறிய நீர்பாசனக் குளங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தவிர்ந்த எஞ்சிய காணிகள் எல்லாமே வானம் பார்த்த பூமியே. இவ்வாறான வானம் பார்த்த வயல்கள் எல்லாம் சில வருட பயிர்ச் செய்கை முயற்சியின் பின் நட்டத்தின் மேல் நட்டமடைந்து கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளன. கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய நீர்ப்பாய்ச்சல் குடியேற்றமான கல்லோயா குடியேற்றமும், கந்தளாயின் பெரும் பகுதியும் வெளிமாகாண சிங்களவர்களுக்கே கொடுக்கப்பட்டது. மொத்தமாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் நிலங்களை கணக்கில் எடுப்போமானால் அவற்றில் பெரும்பாலானவை வானம் பார்த்த பூமிகளே. ஆனால் சிங்களப் பகுதிகளிலோ அனேகமாக எல்லாமே நீர்பாய்ச்சல் நிலங்களே. நீர்ப்பாய்ச்சல் காணியானது வருடத்தில் 2.3 போகங்கள் செய்கை பண்ணக்கூடியதுடன் அதிக விளைச்சலும் தரக்கூடியது. ஆகவே அவ்வாறு பார்த்தால் வானம் பார்த்த பூமியிலே நான்கு ஏக்கர் நிலம் வைத்திருப்பதும் நீர்ப்பாய்ச்சல் காணியிலே ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பதும் ஏறத்தாழச் சமமானதே. நிலம் பெரிதான பொழுதிலும் பெறுமதி குறைவானதே. இலங்கையின் மொத்த சனத்தொகையின் 25 % மான தமிழ் பேசும் சமூகம் முழுவதிற்கும் காணி உரிமை வடக்கு கிழக்கில் மாத்திரமே உண்டு என்றவாறே அரசாங்கங்களினால் இதுவரை கருதப்பட்டு வந்துள்ளது. அவற்றிலே சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு விட்ட குடியேற்றங்களைக் கழித்துவிட்டுப் பார்த்தோமானால் இந்த 25 % த்திற்குச் சமமான காணிகளே வடக்கு கிழக்கில் எஞ்சும். எதிர் காலத்திலே வடக்கு கிழக்கிலே காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் பொழுது வெளி மாகாணத் தமிழ் பேசும் சமூகங்களுக்கும் ஒரு விகிதாசாரப்படி பகிர்தளிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்படுமானால் பிச்சினை மிக இலகுவாகிவிடும். மாறாக கிழக்கு மாகாணத்தில் 80 % மான சிங்களவர்களை குடியேற்றும் நோக்கத்துடன் அரசாங்கமா தேசிய குடியேற்றம் என்னும் பெயரைப் பாவிக்க முயல்கிறது. தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களாக பதவியா, புத்தளம் போன்றவை இருந்த பொழுதும் அவர்களுக்கு இது காலவரையும் நீர்ப்பாசனக் குடியேற்றத்தில் நிலம் வழங்கப்படவில்லை. ஆனால் தற்பொழுது மகாவலிக்குடியேற்றங்களில் சில முஸ்லீம்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. காரணம் அதை உதாரணமாகக்காட்டி கிழக்கு மாகாணத்தில் தேசிய இன விகிதாசாரத்தில் குடியேற்றங்களை நடத்துவதே அரசின் நோக்கம். மகாவலி குடியேற்றம் ஆரம்பமாகி 20 வருடங்களுக்கு மேலாகி விட்ட பொழுதிலும் இப் பொழுது தான் அர்சு இவ்வாறான குடியேற்றங்களில் தேசிய இன விகிதாசாரம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறது. இது வரையில் கடந்த 22 வருடங்களில் நடைபெற்ற பாரிய குடியேற்றங்களில் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளின் அளவை கணக்கிலெடுத்தால் கிழக்குமாகாணத்தில் மகாவலியின் கீழ் வரும் காணியானது தமிழர்களின் இன விகிதாசாரத்திற்கு ஒத்ததாகவே இருக்கும். ஆனால் அரசோ பழைய கணக்கு எல்லாவற்றையும் மறந்து விட்டு புதிதாக தேசியக் குடியேற்றத்தை அறிமுகப்படுத்த முயல்கின்றது. மழை வீழ்ச்சி குறைவான வடக்கு கிழக்கிலே வருகின்ற நீர்ப்பாய்ச்சல் காணிகள் எல்லாவற்றையும் பெரும்பான்மை சமூகமே அனுபவிக்கவேண்டும் என்று அரசு நினைப்பது மிகவும் அநீதியான செயலாகும். கிழக்கு மாகாணத்திலே வெளிமாகாண தமிழ் பேசும் சமூகங்களுக்கு காணி வழங்கப்படும் போது அது தமது இனவிகிதாசாரத்தைப் பாதித்து விடலாம் என்று கிழக்கு மாகாண சிங்களவர் பயப்படலாம். ஆகவே அவர்களின் இனவிகிதாசாரம் பாதிக்கப்படாதிருக்கும் படியாக 56ம் ஆண்டு அல்லது 77ம் ஆண்டு எடுக்கப்பட்ட இனவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்பட்டு சிங்களவர்களுக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்படலாம்.

> "ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்குவதன் மூலம் சிங்களவர்கள் தான் அதிக நன்மை அடைவார்கள் தவிர தமிழர்கள் அல்ல என்பதே உண்மையாகும்.
>
> ஆனால் தமது பகுதிகளில் தமது கலாசாரத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ்வதற்காகத் தான் தமிழ் மக்கள் தமது நில உரிமையை எதிர்பார்க்கின்றனர். என்பதை பெரும்பான்மை சிங்களவர்கள் புரிந்து கொள்வார்களானால் பிரச்சினை இலகுவாகத்தீர்ந்து விடும்."

வடகிழக்கு மாகாணத்தின் ஏனைய வளங்களுடன் சிங்களப் பகுதியின் வளங்களை ஒப்பிடுவோமானால் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் பயிர்களான தேயிலை, இறப்பர், வாசனைத் திரவியங்களுடன் இரத்தினக் கற்களும் சிங்களப் பகுதிகளிலேயே உண்டு. அத்துடன் மலிவாக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நீர்வீழ்ச்சிகளும் சிங்களப் பகுதிகளிலேயே உண்டு. தமிழர் மானிலத்திற்கு பூரண சுயாட்சி வழங்கப்படுமாகில் அவர்களுக்கு வேண்டிய மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வெளிநாட்டுச் செலாவணியை சம்பாதிப்பதே தமிழர் மானிலத்திற்கு ஆரம்பத்தில் மிகவும் கஷ்டமாக இருக்கும். அதேநேரத்தில் அவ்வாறு பூரண சுயாட்சி வழங்கப்பட்டால் சிங்கள மானிலத்திற்கு அதிக அளவு வெளிநாட்டுச் செலாவணியும், செலவற்ற மின்சாரமும் மீதமாகும்.

அடுத்ததாக அரசு தமிழ் மானிலத்தை இணைத்துக் கொடுக்கவிரும்பாததற்குக் காரணம் திருகோணமலை தமிழர்களுக்குப் போய் விடும் என்பதால். வடக்கு கிழக்கு வேறு எந்த வளமும் அற்றதால் வெளிநாட்டு ஏற்றுமதியை நம்பியிருக்கக் கூடிய கைத்தொழில் மூலமே தமது மக்களுக்கு அவர்களால் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தமுடியும். ஒரு கைத்தொழில் நகருக்குரிய நீர்வளமும் துறைமுக வசதியும் கொண்ட இடம் வடக்கு கிழக்கிலே திருகோணமலை மாத்திரமே. வடக்கு மாகாணத்தில் இந்த வசதி அறவே இல்லை. திருகோணமலை துறைமுகமானது மலையால் சூழப்பட்டிருப்பதன் காரணமாக ஒரு சிறந்த பாதுகாப்பான கடற்படைத் துறைமுகமே தவிர, சிங்களவரோ தமிழரோ நினைப்பது போன்று சிறந்த கைத்தொழில் துறைமுகமாக இருக்க முடியாது. காரணம் கரையில் மலை இருப்பதன் காரணமாக கரையானது சடுதியாக ஆழமானது. அதனால் இறங்கு துறை கட்டுவது மிகவும் கடினமானது. இதுவரை காலமும் இறங்கு துறை வசதியின்றி கப்பல்கள் நடுவிலே நங்கூரமிடப்பட்டு சாமான்கள் வத்தைகளிலேயே இறக்கப்பட்டு வந்துள்ளது. பிறீமா ஆலை மாத்திரம் தான் பெரும் பணச் செலவில் ஒரு மலையை உடைத்து நிரப்பி ஒரு இறங்குதுறையை அமைத்துள்ளது. கொழும்புத் துறைமுகமானது பெருமளவு தப்பல்களில் சாமான்களை இறக்கி ஏற்றும் துறைகளைக் கொண்டுள்ளதுடன் இன்னும் பல இறங்கு துறைகள் கட்டக்கூடிய இடவசதியும் உண்டு. அத்துடன் கொழும்புத் துறைமுகமானது சர்வதேச கப்பலோட்டத்தின் பாதையில் இருப்பதன் காரணமாக கப்பல் கூலியானது சாதாரணக் கப்பல் கூலியிலும் பார்க்க 20 % குறைவாகவே உள்ளது. ஆனால் திருகோணமலை பாதையில் இருந்து விலகி இருப்பதன் காரணமாக அதிக கட்டணமே செலுத்த வேண்டியிருக்கும். ஆகவே இலாபகரமான கைத்தொழில்களுக்கு கொழும்புத் துறைமுகமே சிறந்ததாகும். ஆகவே ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்குவதன் மூலம் சிங்களவர்கள் தான் அதிக நன்மை அடைவார்களே தவிர தமிழர்கள் அல்ல என்பதே உண்மையாகும். ஆனால் தமது பகுதிகளில் தமது கலாசாரத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ்வதற்காகத்தான் தமிழ் மக்கள் தமது நில உரிமையை எதிர்பார்க்கிறனர் என்பதை பெரும்பான்மை இனமாகிய சிங்களவர்கள் புரிந்து கொள்வார்களானால் பிரச்சினை இலகுவாகத் தீர்ந்துவிடும். ●

நன்றி - நூலகத்திட்டம்



அயல் வீட்டில்

# மிக மோசமாக இனவாதத்தை தூண்டி வரும் ஐ.தே.கட்சி தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமா?

-விக்டர் ஐவன்

(கடந்த இதழில் வெளியான விக்டர் ஐவன் உடனான நேர்காணலின் தொடர்ச்சி)

க........ சற்று வெலவெலத்துப் போய் ''இவ் விடயத்தைத் தயவு செய்து வெளியிட வேண்டாம் '' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார். நான் சொன்னேன் '' நான் இதை வெளியிட மாட்டேன். ஆனால் நான் இச் சம்பவத்தை எப்பவும் மறக்கமாட்டேன்.'' என்று இந்தச் சம்பவத்தை நான் உங்களுக்குச் சொல்லுவது உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்பதற்காக. தமிழ் மக்களும், தமிழ் மக்களுக்காகப் போராடுகின்ற அமைப்புகளும் எப்போதும் ஐ.தே.கட்சிக்கு முண்டு கொடுப்பது ஏன்? அது தான் எனக்குப் புரியவில்லை.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு மொழியைப் பேசுகின்ற, வெவ்வேறு மொழியை அனுஷ்டிக்கின்ற, வெவ்வேறு சாதியமைப்புகளிடையே வாழ்கிற மக்களிடையே மனத்தாங்கல்கள் இருப்பது இயல்பு. ஆனால் அவற்றை அரசியல் சக்திகள் பயன்படுத்த நாம் விட்டு விட்டதே இன்றைய மிகப் பெரும் ஆபத்தான சூழ்நிலைக்குள் எம்மைத் தள்ளி விட்டுள்ளது.

இன்று நான் எதிர்பார்க்கின்ற ஜனநாயகக் கட்டுமானம் என்பது, தனியே சிங்கள மக்களால் மற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஜனநாயகக் கட்டுமானம் என நான் கருதவில்லை. தமிழ் மக்களால் மற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஜனநாயக கட்டுமானமாகவும் நான் கருதவில்லை. இந் நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து முன் வைக்கின்ற ஒரு ஜனநாயகக் கட்டுமானத்தைக் கொண்ட வேலைத்திட்டமே அவசியம். ஏன் இதுபற்றி தமிழ் மக்களும், தமிழ் அரசியல் சக்திகளும் சிந்திக்கக் கூடாது.

தமிழ் மக்களின் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற தமிழ்ப் புத்திஜீவிகளான நீலன் திருச்செல்வம் போன்றவர்கள் கூட இந் நாட்டின் ஜனநாயக மறுப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் போது மௌனமாக இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

நாட்டினுடைய பொதுப் பிரச்சினையில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இணைய முடியாத வகையில் பிரித்து வைத்திருப்பதுதான் இன்றைய அரசின் மிகப் பெரிய வெற்றி என்று நான் கருதுகிறேன். ஐ.தே.கட்சி எப்போதும் மிகத் திறமையாக தமிழ் மக்களுக்குச் சேவை செய்யும் கட்சியாகத் தன்னைக் காட்டிக் கொள்வதில் வெற்றியடைந்திருக்கிறது. ஒப்பீட்டளவில் ஸ்ரீ.ல.சு.கட்சி சிங்கள இனவாதக் கட்சி போல் தோன்றினாலும் ஐ.தே.கட்சியைப் போன்று, வேண்டுமென்றே தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் செயலில் எப்போதும் இறங்கியதில்லை. 1977ம் ஆண்டில் தான் எதிர்பார்த்ததை விட பன்மடங்கு வெற்றியை ஜே.ஆர் அடைவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி(T.U.L.F)மிகப் பாரிய உதவிகளைச் செய்துள்ளது. வடகிழக்கு தவிர்ந்த த.வி.கூட்டணியின் அபேட்சகர்கள் நிறுத்தப்படாத இடங்களிலெல்லாம் முழுத் தமிழ் மக்களின் வாக்குகளையும் ஐ.தே. கட்சிக்கு விழச் செய்ததில் த.வி. கூட்டணிக்கு பாரிய பங்குண்டு. அக் கட்டத்தில் ஜே.ஆர் உம் த.வி. கூட்டணியும் மிக அந்நியோன்னிய உறவைக் கொண்டிருந்தார்கள் என்பதும் வெளிப்படையானது.

இன்றும் தமிழ் மக்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல் கட்சிகளும் இன்னும் மிக மோசமான இனவாதத்தைத் தூண்டி வருகின்ற ஐ.தே. கட்சி மீது நம்பிக்கை வைத்து அதனூடாக ஒரு தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்பது என்னால் புரிந்து கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாக இருக்கிறது. நான் தமிழ் மக்களிடம் எதிர்பார்ப்பது; இந்நாட்டின் பிரச்சினையை இன்னும் ஆழமாக உற்று நோக்குங்கள் என்பதைத் தான். உங்களுடைய பிரச்சினையைப் பார்ப்பதோடு நின்றுவிடாது இந் நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளையும் ஆழமாகப் பாருங்கள். இன்று இந் நாட்டில் எழுந்துள்ள ஜனநாயக விரோதப் போக்கிற்கு எதிராக கை கோர்க்கும் அளவிற்கு உங்கள் பார்வையை அகலமாக்குங்கள். அப்படியானால், ஜனநாயக மறுப்புப் போராட்டத்தில் இந் நாட்டில் முதலிடம் பெறப் போவது நிச்சயமாக இனப் பிரச்சினை என்பது சந்தேகமின்றிப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். காரணம்; ஒட்டு மொத்தமாக ஒரு மொழியைப் பேசுகிறார்கள் என்பதற்காக மட்டுமே ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு ஜனநாயகம் மறுக்கப்பட்டிருக்கிறது என்கிற உண்மையான விடயம்தான்.

**கேள்வி: இன்றுள்ள இனவாதக் குழுக்களான ''ஜாதிக சிந்தனய'' ''ஹெல உருமய'' போன்ற குழுக்கள் பற்றி...?**

பதில் : இது ஐம்பத்தெட்டோ, எழுபத்தேழோ அல்லது 83 காலகட்டமோ அல்ல. இந் நாட்டில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் கடந்த கால அனுபவத்தினூடாக மிகக் கசப்பான அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவ்வளவு எளிதில் இனவாதக் குழுக்கள் சிங்கள மக்களைத் தம்பக்கம் இழுத்து, தாம் ஒரு சக்தியாக வளரக் கூடிய நிலைமை இன்றில்லை. கடந்த மாதம் காலியில் மேர்ஜ் தாபனத்தினால் நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு இருநூறுக்கு மேற்பட்டோர் வருகை தந்திருந்தார்கள். அடுத்த நாள் ஹெல உருமயவால் வைக்கப்பட்ட, மிகத் திறமையான பேச்சாளர்கள் உரையாற்றிய கூட்டத்தில் நூற்றுக்கும் குறைவானவர்களே பங்கேற்றார்கள். இது ஒரு சிறிய உதாரணம் மட்டுமே. ராவய பத்திரிகையை எடுத்துக் கொண்டால் கூட இனப்பிரச்சினை உக்கிரமடைந்த காலத்தில் தொடங்கப்பட்டு நடாத்தப்பட்ட பத்திரிகை இவ்வளவு பிரபல்யம் அடைந்திருக்கிறது என்றால் அதற்கு காரணம் நாங்கள் மக்களின் பொதுவான பிரச்சினைகளைத் தொட்டதுதான். ஆனால் இனப்பிரச்சினை சம்பந்தமாக எமது நிலைப்பாடு ஒருபோதும் இனவாத அடிப்படையில் அமைந்ததில்லை. ஆனால், தீவிர இனவாதம் பேசும் எவராலுமே இவ்வளவு பிரபல்யமான ஒரு பத்திரிகையை நடாத்த முடியாது என்பதே என்னுடைய கணிப்பாகும். ஆனால் இவ் இனவாதிகள் எமது பத்திரிகையை தமிழருக்கான பத்திரிகை என்றே கூறுவர். - உதாரணமாக நளின் டி சில்வா எமது பத்திரிகையை சொல்லுவது '' தமிழர்களின் ராவய '' என்றுதான். ஆனால் அது நளின் டி சில்வாவின் கருத்தே அல்லாது பெரும்பான்மையான சிங்கள மக்களின் கருத்தல்ல.



**கேள்வி:சுதந்திரமான ஒரு பத்திரிகையை வெளியிடுவதில் உங்களுக்குள்ள நெருக்கடிகளை சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

பதில்: பிரதான பிரச்சினை, பத்திரிகைளாளருக்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் அரசாங்கம் போடும் வரையறையை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை. அதனால் அந்த அடிப்படையில் அவர்களுடைய வரையறையை நாங்கள் தாண்டும் போது அதனைத் தடுக்க முயலுகிறது. முடியாத பட்சத்தில் பத்திரிகையாளர் மீது தாக்குதலைத் தொடுக்கிறது.

**கேள்வி: சரிநிகர் வாசகர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: முக்கியமாகத் தமிழ் மக்களுக்கு நான் சொல்ல விரும்புவது முடிவில்லாத நீண்டகால ஆயுதப் போராட்டம் என்பது முடிவில் அத்தேசத்தின் அந்த மக்களின் அழிவுக்கு வழிவகுக்கும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். அதற்கு இன்று உலகெங்கும் பல உதாரணங்கள் இருக்கின்றன.

தென்கிழக்கு ஆசியாவில் விடுதலைப் போராட்டங்களுக்கு எப்போதும் முன்னுதாரணமாக எடுக்கப்படுகின்ற வியட்னாமியப் போராட்டம் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது தங்கள் முழுச் சக்தியையும் ஒன்று திரட்டி எதிரிக்கெதிராக போராடிய ஒரு மாபெரும் போராட்டமாகத் தென்பட்டாலும், அது முகம் கொடுத்த நீண்ட கால யுத்தத்தின் பின்பு இன்றும் அந்த நாடு உலகத்தில் மிக வறிய நாடுகளுள் ஒன்றாகத்தான் இருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். தமிழ் மக்களுடைய இப் போராட்டம் இன்று பலவீனம் அடைந்திருப்பதற்கு நான் காணுகின்ற ஒரு பிரதான அம்சம் தமிழ் மக்களுக்காகப் போராடுகின்ற சக்திகள் தென்பகுதியில் வாழும் சாதாரண சிங்கள மக்களின் அரசுக் கெதிரான போராட்டத்தில் இருந்து ஒதுங்கி நிற்பதாகும். இதற்கு ஓர் சிறந்த உதாரணத்தை நான் சொல்லுவதானால், 77ல் த.வி.கூட்டணி எதிர்க்கட்சியாகப் பாராளுமன்றத்தில் பிரவேசித்த பின் இங்கு நடந்த சிங்கள டிக்களின் அரசுக் கெதிரான போராட்டத்தில் சிங்கள மக்களுக்குச் சார்பாக பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் குரல் எழுப்பியபோது மிகப் பிரமாண்டமான வரவேற்பை அவர் பெற்றார். அவ்வகையில் இன்று பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்காகக் குரல் கொடுக்கிற தமிழ் மக்களும், தமிழ் அரசியல் சக்திகளும் நாட்டின் அடிப்படையான பிரச்சினையான பொருளாதாரத்தோடு கூடிய போராட்டத்திலும் சிங்கள மக்களுடன் சேர்ந்து குரல் கொடுக்கவும், அப் பொதுப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ளவும் தயாராக இருப்பார்களாயின், தமிழ் சிங்கள மக்களிடையே ஏற்பட்டிருக்கும் இச் சந்தேகம், பய உணர்வு நிச்சயம் நீக்கப்படும்.

## புலிகள்....

அதனாற்தான், முஸ்லீம்களை தற்காலிகமாக யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லுமாறு கூறினோம். அதையும் அவர்களின் பாதுகாப்புக்காகவே செய்தோம்.'' என்று, புலிகளின் தலைவர் எதை நியாயப்படுத்த இவ்வாறு கூறுகிறார்?

அப்படித்தான தமிழ் முஸ்லீம் கலவரம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டால், அதைத் தடுக்க சக்தியற்றவர்களாகவா புலிகள் இருந்தார்கள்? இந்திய உபகண்டத்தையே உலுக்குவதாக - இலங்கை இராணுவத்தையே திணற வைப்பதாகக் கூறப்படும் புலிகளுக்கு, யாழ்ப்பாணத்தில் ஒரு மூலைக்குள் செறிந்து வாழ்ந்த முஸ்லீம்களைப் பாதுகாப்பது அவ்வளவு கஷ்டமாகவா இருந்திருக்கும்? உடுத்த பிடவையோடும், கட்டிய சாறனோடும் முஸ்லீம்களைத் துரத்தினார்களே ஏன்? பச்சிளம் குழந்தைகளின் பால்மாவைக்கூடப் பறித்தார்களே ஏன்? முஸ்லீம்களின் தேட்டத்தை எல்லாம் பறித்துக் கொண்டு துரத்தினார்களே அது எதற்கு? எம். கே. எஸ். சுல்தான் காதர் - பிரபல நகைக் கடைக்காரச் சொந்தக்காரர் - உங்கள் வதைமுகாமில் மூச்சுத் திணறடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாரே அது எதற்கு?

'' அஷ்ரஃபிடம் போய்க் கேள்! அம்பாறை இருக்கிறது போய்ச் சேர்!!'' என்று கூறினார்களே அது ஏன்? இவைகளெல்லாம் முஸ்லீம்களின் பாதுகாப்புக்காகவா செய்யப்பட்டன?

நல்லெண்ணம் - சமாதானம் - தமிழ் - முஸ்லீம் நல்லுறவில் நாட்டம் - முஸ்லீம்களுக்கும் தனித்துவம், பாதுகாப்பு, நில உரிமைகள் உண்டு, என்றெல்லாம் புலிகளின் தலைவர் கூறுவதை முஸ்லீம் மக்கள் நம்ப வேண்டும் என்றால், முதலில் கடந்த காலங்களில் முஸ்லீம்களின் மீது புலிகள் மேற்கொண்ட பிழையான அணுகுமுறைகளையும், அநியாயமான தாக்குதல்களையும் நேர்மையாக ஒப்புக் கொள்ள வேண்டும். நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு அடையாளமாக, புலிகளின் சிறைகளில் கிடக்கின்ற 25 முஸ்லீம்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்! அது மாத்திரமன்றி புலிகள் இயக்கத்தின் சார்பில், முஸ்லீம் சமூகத்திடம் மன்னிப்புக் கோருவதோடு, முஸ்லீம்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களையும் பணத்தையும் திருப்பிக் கொடுத்து இழப்புகளை அடைந்தவர்களுக்கு நஷ்டஈடும் வழங்க வேண்டும்!

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவர்கள், தெரிவுக் குழுவின் அறிக்கையில் நம்பிக்கை வைத்து அதை எதிர்பார்த்திருந்த போதும் தெரிவுக் குழுவிலுள்ள சிங்களப் பேரினவாத அரசியல் சக்திகள், வடகிழக்குப் பிரச்சினையில் தமிழ், முஸ்லீம் சமூகங்களுக்கு ஏற்புடையதான அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு, இந்தநாடு சந்தர்ப்பவாத இனவாத

9

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி.... 14

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தமிழ் ஈழப்போராட்டத்தின் வளர்ச்சிப் படியில் ஒரு படிக்கல் என்றே கூற வேண்டும். 1970 களின் ஆரம்பத்தில் இதுவரைகால சமஸ்டிக் கோரிக்கை பலனளிக்காமல் போகவே ஒற்றையாட்சியமைப்புக்குள் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை தமிழ்த் தேசிய இனத்தின் முன்னேறிய பிரிவினர் உணரத்தலைப்பட்டனர். இதனடிப்படையில் தனிநாட்டுக் கோரிக்கையினை முன்வைக்கத் தொடங்கினர். அதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தியிருந்த தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றினால் தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பதையும் உணர ஆரம்பித்தனர். இவ்வமைப்புகளுக்குப் புறம்பாக விடுதலை இயக்கம் ஒன்றை கட்டி எழுப்புவதன் மூலமே விடுதலையை வென்றெடுக்கலாம் என்பதையும் புரிந்து கொண்டனர். இப்புரிதலின் அடிப்படையிலேயே முதலில் தமிழ் மாணவர் பேரவையும் அதனைத் தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அமைப்புக்களையும் உருவாக்கினர்.

## அனைத்துத் தவறுகளின் தோற்றுவாய் கூட்டணி அரசியலே

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தோற்றம் தமிழ் தேசியப் போராட்டத்தின் வளர்ச்சிப்படியாக இருந்த போதும் அதன் அரசியல் கூட்டணியின் அரசியலாகவே இருந்தது. தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கையான தமிழ் ஈழக் கோரிக்கைக்காக கூட்டணியினர் போராடவில்லை. எனவே போராடுவதற்கு மாற்று இயக்கம் ஒன்று தேவை என்பது உணரப்பட்டே அமைப்பு தோன்றியது. இவ்வாறு தேவையின் அடிப்படையில் அமைப்பைத் தோற்றுவித்தார்களே தவிர அமைப்பின் இலக்கு, இலக்கை அடைவதற்கான வழிமுறை, போராட்ட சக்திகள் பற்றிய மதிப்பீடு, அரசு பற்றிய மதிப்பீடு என்பனவற்றில் தெளிவான கண்ணோட்டத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. இதனால் இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் தன்னியல்பு நடவடிக்கைகளாகவே அமைந்திருந்தன. கூட்டணியின் அரசியலிலிருந்து தம்மை வேறுபடுத்தாமல் நடைமுறை, போராட்டம் என்பவற்றில் மட்டுமே கூட்டணியிலிருந்து வேறுபட்டவர்களாக இவர்கள் இருந்தனர். தமிழ் ஈழமே தமது இலக்கு என்று கூறிக் கொண்டாலும் அவ் இலக்கினை அடைவதற்கான போராட்ட வழிமுறை என்பது தொடர்பாக தெளிவான விளக்கம் எதனையும் முன்வைக்கவில்லை. பொருத்தமான வழியை முன்வைத்து கூட்டணிக்குப் பின்னால் திரண்டிருந்த மக்களை அவர்களிடமிருந்து பிரித்து அரசியல் உணர்வூட்டி ஆயுதபாணிகளாக்கும் படிமுறை வேலைத்திட்டம் எதுவும் இவர்களிடம் இருக்கவில்லை. மக்களை அமைப்பாக்குவதில் உள்ள கடினமான தன்மையால் ஒரு சில முயற்சிகளோடேயே தொடர்ச்சியான முயற்சிகளை கைவிட்டனர். தங்களால் நடாத்தப்பட்ட எரிமலை பத்திரிகையையும் கூட இரு வெளியீடுகளுடன் நிறுத்திக் கொண்டனர். மக்கள் மத்தியில் மேற்கொண்ட கருத்தரங்கு வடிவம், வகுப்பு வடிவம் போன்ற பிரச்சார வடிவங்களையும் காலப்போக்கில் நிறுத்திக் கொண்டனர். இதனால் அரசியல் ரீதியாக கூட்டணியின் பின்னால் திரண்டிருந்த மக்களை இவர்களால் வென்றெடுக்க முடியவில்லை. இறுதியில் இவர்களே அமைப்பையும், தங்களையும் கூட்டணியின் காலடியில் வைக்கின்ற நிலைக்கு ஆளானார்கள். எமது சமூகத்தில் நீண்ட காலமாக நிலவிவந்த அரசியல் போராட்டம் மக்களால் நடாத்தப்படுவதில்லை; இலட்சியவாதிகளாலேயே நடாத்தப்படுகிறது என்ற கண்ணோட்டமும் மக்களை இணைத்துக் கொள்ள முயற்சிக்காத இவர்களின் தவறுக்கு காரணமாக அமைந்தது.

> மீண்டும் மீண்டும் விட்டுக் கொண்டிருக்கின்ற
> மிகப் பெரிய தவறு கூட்டணி அரசியலிலிருந்து
> முறித்துக் கொள்ளாமையாகும்.
> எப்போது அதனை முறித்துக் கொண்ட
> ஒரு தலைமை வெளிக்கிளம்புகிறதோ
> அன்று தான் தமிழ் தேசிய இனத்திற்கு
> ஒரு நல்ல தலைமையை
> எதிர்பார்க்க முடியும்.

ஆயுதப் போராட்டம் தொடர்பான இவர்களுடைய புரிதலும் தவறானதாகவே காணப்பட்டது. 1971 இல் நடைபெற்ற பங்களாதேஷ் விடுதலைப் போராட்டம், மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி என்பவற்றினால் கவரப்பட்டு அதே போல் நாமும் ஆயுதப் போராட்டத்தை நடாத்தலாம் என்ற முடிவுக்கு வந்தார்களே தவிர எமது நாட்டிற்கேற்ப ஆயுதப் போராட்ட வழிமுறை என்ன? தமிழ்த் தேசிய இனத்தை ஒடுக்குகின்ற அரசு, அரசு இயந்திரங்கள் எப்படிப்பட்டவை? என்பது தொடர்பான ஆழமான அறிவு இவர்களிடம் இருக்கவில்லை. இதனால் ஓர் ஆயுத இயக்கத்திற்கான படிமுறை வளர்ச்சி இல்லாமல் ஆயுத நடவடிக்கைகளில் இறங்கினர். ஆயுத அமைப்புக்குரிய இரகசியத் தன்மைகளை ஒழுங்காகப் பேணத் தவறியதினாலும் வெளிப்படையாக வேலைசெய்த தங்க மகேந்திரன், சந்திரமோகன், கோவை-நந்தன், புஸ்பராணி போன்றோரே ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டபடியாலும் ஆயுத நடவடிக்கையை மேற்கொண்ட சிறிது காலத்திலேயே எல்லோரும் கைதுசெய்யப்பட்டனர். இதனால் இவர்களது அமைப்பு சிதைவது தவிர்க்க முடியாததாயிற்று.

ஆயுதப் போராட்டம் தொடர்பாக இவர்கள் விட்ட இன்னோர் தவறு ஆயுதப் போராட்டத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தினால் அரசியல் போராட்டத்தினை நிராகரித்தமையாகும். இது தொடர்பாக ஆயுதப் போராட்டத்தை நோக்கி மக்களைத் திருப்புவதற்கு ஒருவழி அரசியல் போராட்டமே என்பதை - ஆயுதப் போராட்டம் என்பது அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியே என்பதை - இவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. உண்மையில் நுணுக்கமாகப் பார்த்தால் பிற்காலத்தில் புலிகளிடம் முழுமையாகவும் ஏனைய குழுக்களிடம் பகுதியாகவும் காணப்பட்ட சுத்த இராணுவ கண்ணோட்டமே இவர்கள் மத்தியிலும் ஆதிக்கம் செலுத்தியிருந்தது. ஒரு அரசியல் நிலைப்பாட்டை பாதுகாக்கின்ற கருவியாக இராணுவத்தைப் பார்க்காமல் இராணுவமே எல்லாம் எனப்பார்க்கின்ற இச்சுத்த இராணுவக் கண்ணோட்டம் இவர்கள் அரசியல் போராட்டத்தை நிராகரிப்பதற்கு தூண்டுகோலாக அமைந்தது. இது இவர்களிடம் இருந்த கண்ணோட்டம் என்பதை விட தமிழ்ச் சமூகத்திடம் நீண்டகாலமாக இருந்து வந்த கண்ணோட்டம் என்றே கூறவேண்டும்.

ஒரு போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்புக்கு தம்மை ஒடுக்குகின்ற அரசு, அரசு இயந்திரங்கள் பற்றிய மதிப்பீடு அவசியமான ஒன்றாகும். அம்மதிப்பீடு இருக்கின்ற போதே அம்மதிப்பீட்டுக்கு ஏற்ற வகையில் போராட்டத்தை ஒழுங்குபடுத்தமுடியும். அரசு பற்றிய மதிப்பீடு எனும் போது அரசு எந்த வர்க்கத்தைச் சேர்ந்தது, அதனுடைய வர்க்க சார்பு சக்திகள் யார்?, அரசினுடைய எதிரிகள் யார்? அதனுடைய அரசு இயந்திரங்கள் எப்படிப்பட்டவை? குறிப்பாக அதனுடைய படைக்கட்டமைப்பு எப்படிப் பட்டது? அரசினுடைய பலம் என்ன? பலவீனம் என்ன? என்பதையெல்லாம் அறிந்து கொள்ளல் அவசியமானதாகும். அரசினுடைய பலவீனமான அம்சங்களைத் தாக்கி அரசினுடைய பலமான அம்சங்களை நோக்கி முன்னேறுவதற்கு அதுவே உதவியாக இருக்கும். ஆனால் இம் மதிப்பீடுகள் எதுவும் இவர்களிடம் இருக்கவில்லை.

போராட்டசக்திகள் தொடர்பாகவும் இவ் அமைப்பிற்கு தெளிவான மதிப்பீடுகள் இருக்கவில்லை. போராட்டத்தில் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? உறுதியான பங்காளிகள் யார்? உறுதியற்ற பங்காளிகள் யார்? என்பது தொடர்பாக தெளிவான கண்ணோட்டம் எதுவும் இருக்கவில்லை. சிங்கள பௌத்த பேரினவாத அரசுடனேயே தமது போராட்டம் குவிக்கப்பட வேண்டும் என இவர்கள் உணர்ந்திருந்த போதும் இந்திய அரசு, இலங்கை அரசின் கூட்டாளி, தெற்காசிய பிராந்திய எஜமான் என்பதை அவர்கள் உணரவில்லை. பின்னர் வந்த அமைப்புகளைப் போலவே இவர்களும் இதனை நிராகரித்து மாறாக நண்பர்களாக்கிக் கொண்டார்கள். உண்மையில் பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தினால் கவரப்பட்ட இவர்கள் அங்கு போலவே எமது பிரச்சினையிலும் இந்திய அரசு பிரச்சினை முற்றுகின்ற போது தலையிட்டு விடுதலையை பெற்றுத் தரும் என நினைத்தார்கள். பங்களாதேஷ் போராட்டம் தொடர்பாக பத்திரிகைச் செய்திகளுக்கப்பால் உண்மையாக நடந்தது என்ன என்பது தொடர்பாக இவர்களிடம் எவ்வித மேலதிக தகவல்களும் இருக்கவில்லை.

இவ்வாறு தமது போராட்ட காலத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் தவறுகள் இழைத்த போதும் இவ்அமைப்பின் தோற்றம் முற்போக்கானது. இவர்களது உழைப்பு மிகவும் நேர்மையானது; அன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானது. இவர்களில் பலர் **இதன் தொடர்ச்சியாக EPRLF, EROS இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது அத் தவறுகளைத் திருத்திக் கொள்ள முனைந்தனர்.** எனினும் அடிப்படைப் பிரச்சினைகளில் பழைய தவறுகளோடு, புதிய புதிய தவறுகளையும் விடத் தொடங்கியமையால் மீண்டும் சிதைவுக்கு ஆளானார்கள். இவர்கள் விட்ட, மீண்டும் மீண்டும் விட்டுக் கொண்டிருக்கின்ற மிகப் பெரிய தவறு கூட்டணி அரசியலிலிருந்து தங்களை முறித்துக் கொள்ளாமை ஆகும். எப்போது அதனை முறித்துக் கொண்ட ஒரு தலைமை வெளிக்கிளம்புகின்றதோ அன்று தான் தமிழ்த் தேசிய இனத்திற்கு நல்ல தலைமையை எதிர்பார்க்க முடியும். ●

**அன்னபூரணா**

---

## மதம் மாறிய முருகன்

கதிர்காமம் போயிருந்தேன். மாணிக்க கங்கையில் குளித்துவிட்டு கதிர்காமக் கந்தனைப் பார்க்கப் போனேன். தமிழில் கிடந்த ''ஓம் முருகா'' இப்போது இல்லை. பிரேமா அரசு இந்து சமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. கொழும்பு நகரில் இந்து மதப் பெருமை பற்றி திருமுருக கிருபானந்த வாரியார் பேச வந்தார். அவரைப் பல்லக்கில் சுமந்து வந்தார்கள். இது தலைநகரில் நடக்கின்றது. '' ஓம் முருகா '' என்ற எழுத்துக்கள் தெற்கில் கீழே இறக்கப் படுகின்றன. முருகன் மதம் மாறிவிட்டாரோ...............
ஹீ......ஹீ......

- ' திக்வயல் ' தர்மகுலசிங்கம்

---

## புலிகள்....

அரசியலில் தங்கியிருக்கும் வரைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் - முஸ்லீம் சமூகங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைக்கப் போவதில்லை.


ஆனால், இன்றைய சூழ்நிலையில் தமிழ் - முஸ்லீம் மக்களின் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து, ஒரு கோரிக்கையை முன் வைக்க முடியுமாக இருந்தால் சிங்களப் பேரினவாத சக்திகளினால் அதை தட்டிக் கழிக்க முடியாமல் போகலாம். அல்லது, அந்த சக்திகள், சர்வதேச அரங்கில் மேலும் அம்பலப்பட நேரலாம். எவ்வாறாயினும் அரசியல் தீர்வொன்றைத் துரிதப்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம். இலங்கையின் யுத்தகாலப் பொருளாதார நெருக்கடிகளுக்கு உலகநாடுகளதும், சர்வதேச நிறுவனங்களினதும் உதவிகள் நீண்டகாலம் நீடிக்கப் போவதுமில்லை.

எனவே, எவ்வாறாயினும் தமிழ் - முஸ்லீம் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து பரஸ்பரம் தமது தனித்துவம், பாதுகாப்பு, பிரதேச ஆட்சி உரிமைகளை அங்கீகரித்துக் கொண்டு, வடகிழக்கு இணைந்த மாகாண சபைக்குள், அல்லது எதிர்பார்க்கப்படும் ஒரு சமஸ்டிமுறையான அமைப்புக்குள் நமக்கும் நாட்டுக்கும் ஒத்திசைவான கோரிக்கையை முன்வைப்பது பற்றி தீவிரமாக யோசிக்க வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையத்தில் வாழ்பவர்கள் மட்டும் தான் மலையகத்தவர்களா?



மலையக மக்களின் தேசியம் தொடர்பாக மலையகன் எழுதிய கட்டுரைக்குப் பதிலளிக்கும் விதத்தில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை இது தொடர்பான விவாதத்தை மேலும் விரிவாக்க வழிவகுக்கும் என நம்புகிறோம்.
ஆ-ர்

**இ.தம்பையா**

இலங்கையின் ஆயிரம் அடி உயரத்திற்கு மேற்பட்ட மலையகப் பகுதிகளில் பெருமளவிலும்,மற்றும் வடகிழக்கு, வட மேல், மேல் மாகாணங்களிலும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அல்லது இவர்களது முன்னோர்கள் அனைவரும் சமகாலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்களே. இந்திய வம்சாவளித் தமிழர்களில் பெரும்பாலானோர் மலையகத்தில் நீண்டகாலமாக வாழ்வதனால் 'மலையக மக்கள்' என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றனர். இந்த மலையக அல்லது இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் தமிழ் மொழியைப் பேசினாலும், வடகிழக்கு தமிழ் மக்களிலிருந்து வித்தியாசமான சமூகமாகவே இனம் காணப்படுகின்றனர். தனித்துவமான பொருளாதாரம், கலாசாரம், வாழ்க்கைமுறை என்பவற்றைக் கொண்டுள்ளபடியாலும், வேறுபட்ட ஒரு சமூகமாகக் கொள்ளப்பட்டு இவர்களுக்கெதிரான பேரினவாத அடக்குமுறை முடுக்கி விடப்பட்டுள்ளதாலும், இவற்றிற்கெதிராக ஒரு சமூகமாக அணிதிரண்டு போராட வேண்டியிருப்பதாலும், வேறுபல காரணிகளாலும் இவர்கள் ஒரு தனியான தேசிய சிறுபான்மை இனமாக வாழ்கின்றனர்.

மலையகத்தில் பெருமளவானோர் தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாகவும், தோட்டச் சேவையாளர்களாகவும் உள்ளனர். வியாபாரிகளாக சிலரும் ஆசிரியர்களாகவும் அரச உத்தியோகத்தவர்களாகவும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுமாக இந்திய வம்சாவளித் தமிழர்கள் வாழ்கின்றனர். இறப்பர் தோட்டங்களில் தொழிலாளர்களாக வாழ்ந்தோரின் செறிவு சிதறடிக்கப்பட்ட பிறகு இறப்பர் தோட்ட தொழிலாளர் சமூகம் பலவீனமாயிற்று. ஆனால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பலவித அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் ஒரு சமூகமாக நிமிர்ந்து நிற்கின்றனர்.

இதனை விட ஆரம்ப காலத்திலிருந்தே (இந்தியாவிலிருந்து வந்தது முதல்) கொழும்பு போன்ற பகுதிகளில் நகர சுத்திகரிப்பு துறைமுக வேலைகள் உட்பட பல்வேறு தொழில்களிலும் கணிசமான இந்திய வம்சாவளியினர் ஈடுபட்டனர். இது தவிர பிற்காலத்தில் தொழில் நிமித்தம் மலையகத் தோட்டத் தொழிலாளர் பலர் கொழும்புக்குப் படையெடுத்தனர். இவ்வாறு தொழில் நிமித்தம் கொழும்பு போன்ற இடங்களில் வாழும் மலையகத்தவரில் சிலர் தாம் தற்காலிகமாக இங்கு தங்கியுள்ளதாகவே எண்ணுகின்றனர். இவர்கள் மலையகத்தையே தமது நிரந்தர வதிவிடமாகக் கொள்ளுகின்றனர். பௌதீக ரீதியில் மலையகத்தில் தொடர்ந்து வசிக்காவிடினும் மலையகமே தமது நிரந்தர வதிவிடம் என்கிற நம்பிக்கை இவர்களிடம் இருக்குமாகவே உள்ளது.

77,83 இனக் கலவரங்களையடுத்து கணிசமான மலையக மக்கள் வட-கிழக்குப் பிரதேசங்களில் குடியேறினர். இவ்வாறு குடியேறியவர்களால் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களுடன் இரண்டறக் கலக்க முடியவில்லை. இவர்கள் இன்னமும் மலையகத்துடன் தொடர்புடையவர்களாகவும், தனியான சமூகமாகவுமே இனம் காணப்படுகின்றனர். இந்தியாவிலிருந்து வந்தவர்களில் ஒரு பகுதியினர் வடமேல் மாகாணத்தில் குறிப்பாகப் புத்தளம், சிலாபம் பகுதிகளில் தென்னந் தோட்டங்களில் தொழிலாளர்களாயினர். சிறுபகுதியினர் தென்னந் தோட்டங்களை அண்மித்த பகுதிகளில் வியாபாரத்திலும் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டனர். தென்னந் தோட்டங்களில் குடியேறியவர்களில் ஒரு பகுதியினர் பிற்காலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கொண்டு தனியான சமூகமாக உருவாகி வருகின்றனர்.

வடமேல் மாகாணத்தில் வாழ்வோர் மலையகத்தை அவர்களது நிரந்தர வசிப்பிடமாகக் கொள்ளாவிடினும் வட-கிழக்கு தமிழர்களை விட வித்தியாசமான சமூகமாக இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளத்துடன் (இலங்கைத் தமிழர் என்று பிறப்புப் பதிவு செய்து கொண்டாலும் கூட) ஒரு சமூகமாகவே வாழ்கின்றனர். அவர்களுக்கெதிரான அடக்குமுறை இந்திய வம்சாவளியினருக்கு எதிரானதாகவே கொள்ளப் படுகிறது. எனவே இவர்கள் மலையக மக்களின் ஒரு பகுதியினராக நின்றே அடக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கிறது.

சட்டப் பேராசிரியர் டைசி "ஒருவர் தொடர்ந்து ஒரு இடத்தில் வசிக்காவிடினும் தொடர்ந்து வசிக்க எண்ணம் கொண்டிருந்தால் அது அவரது நிரந்தர வசிப்பிடம்" என்று கூறியுள்ளார். அதன்படி மலையகத்திற்கு வெளியில் வாழ்பவர்கள் மலையகத்தில் வசிப்பதற்கு எண்ணம் கொண்டுள்ளபடியால் மலையகமே அவர்களது நிரந்தர வசிப்பிடமாகும்.

அதைவிட ஜேர்மானிய வழக்கப்படி ஒரு மனிதன் எந்த இடத்தில் வசித்தாலும் ஒரு இடத்திற்கு செல்லும் போது மற்ற எல்லா இடங்களில் இருப்பதை விட மேலான மகிழ்ச்சியை அனுபவித்தால் அதுவே அவனது தாயகமாகும். அதன்படி மலையகத்திற்கு வெளியில் இருப்போர் மலையகத்திற்கு செல்லும் போது அளவில்லாத மகிழ்ச்சியடைகின்ற படியால் மலையகமே அவர்களது தாயகம் என்பதில் எவ்வித அபிப்பிராய பேதமும் இருக்கமுடியாது.

மேற்படி வேறுவேறு இடங்களில் சிதறி வாழ்ந்தாலும் அவர்கள் யாவரும் "தோட்டக் காட்டான்" அல்லது இந்திய வம்சாவழியினர் என்றே அடையாளம் காணப்படுகின்றனர்.

மலையக மக்கள் என்றாலும் சரி ஏனைய இடங்களில் வாழும் இந்திய வம்சாவளியினர் என்றாலும் சரி அவர்கள் யாவரும் வித்தியாசமான ஒரு சமூகமாகவே அடையாளம் காணப்படுகின்றனர். மலையகம் என்ற ஒரு பதத்தை மட்டும் கொண்டு மலையக மக்கள் என்பது மலையகத்தில் வாழ்பவர்களை மட்டுமே குறிக்கும் என்று குறுகிய விளக்கமளித்தல் கூடாது.

எனவே மலையக மக்கள் என்ற பதத்தை விரிவாக விளங்கி அதற்குள் ஏனைய இடங்களில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களையும் சேர்த்து பார்க்க வேண்டும். அல்லது இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் என்பதனுள் மலையக மக்களையும் உள்ளடக்கி அடையாளம் காணப்படுவதே சரியானது.

இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் வரலாற்றை ஆராய்ந்தால் இந்தியர்கள் என்ற ரீதியில் அவர்கள் யாவரும் ஒடுக்கப்பட்டு வந்தமையை காணமுடியும். அந்த அடக்குமுறைகள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடியும். அந்த அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களும் இலங்கை வாழ் முழு இந்திய வம்சாவளி மக்களையும் ஐக்கியப்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முழு இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வை கோரி முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கை நமது நாடு, மலையகம் நமது பிரதேசம், நாம் ஒரு சிறுபான்மை சமூகம் என்ற ரீதியில் மலையக மக்களின் தேசிய உணர்வு வளர்ச்சியடைந்துள்ளது. அதே போன்று ஏனைய இடங்களில் வாழும் இந்திய வம்சாவளி மக்களும் மலையக தேசிய உணர்விற்கு உரம் சேர்ப்பது போன்று இலங்கை நமது நாடு, நாம் ஒரு சமூகம் என்ற உணர்வுடன் வாழ்கின்றனர். மேற்படி இரு உணர்வுகளும் இணைக்கப்பட்டு அதாவது மலைக தேசிய உணர்வுடன்,மலையகத்திற்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினரின் தேசிய உணர்வும் இணைக்கப்படவேண்டும்.அப்படி செய்வதே மலையக தேசிய உணர்விற்கு பலம் சேர்ப்பதாகும்.

வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் இலங்கை தமிழ் மக்களையும் மலையகத்திற்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளி மக்களையும் ஒன்றாக கொள்ள முடியாது. ஏனெனில் வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் இலங்கைத் தமிழர்கள் உதிரிகளாக இடமாற்றத்தை எதிர்பார்த்து வாழ்பவர்களாகவே இருக்கின்றனர். மலையகத்திற்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஒரு சமூகமாக, கணிசமான தொகையினராக வாழ்கின்றனர். சமூகரீதியாக அடக்கு முறைக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றுக்கு எதிராக அவர்களுக்கென ஒரு தனியான போராட்ட மார்க்கம் இருக்க முடியாது. அதனாலேயே அவர்கள் மலையகத் தேசிய எழுச்சியுடன் இணைய வேண்டிய, இணைக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். மலையகத்திற்குள் இருப்பவர்களை விட வெளியில் வாழ்பவர்கள் கல்வி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றில் முன்னேறியவர்களாக இருக்கின்ற படியினாலும் அவர்கள் மலையகத் தேசிய எழுச்சியில் இணைவது மலையகத் தேசிய எழுச்சிக்கு பலமானதாக, உரம் சேர்ப்பதாகவே அமையும்.

மலையகத் தேசிய எழுச்சி என்பதனுள் மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளி மக்களையும் இணைப்பதால் அவ்வெழுச்சி "இந்தியத் தேசிய எழுச்சி" என்று தனிமைப்பட்டு விடும் என்று கற்பனை செய்ய வேண்டியதில்லை. அப்படி இணைவதால் அதனை "இந்திய தேசிய எழுச்சி" என்று கொச்சைப் படுத்திப் பார்க்கக்கூடாது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் யாவரும் சமூக ரீதியாக அடக்கு முறைகளை முகம் கொடுக்கும் போது அதற்கு மலையகத்திலுள்ள மக்கள் மட்டுமே போராட வேண்டும் என்றோ, மலையகத்திலுள்ளவர்களின் பிரச்சினைகளுக்கு மட்டுமே தீர்வு வேண்டும் என்றோ நினைப்பது புத்திசாலித்தனமன்று.

சகல இந்திய வம்சாவளியினரும் ஒரே விதமான அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்கும் போது அவை எல்லாவற்றுக்கும் தீர்வு காண முற்படாத மலையகத் தேசிய எழுச்சி பலவீனமானதும், முழுமையற்றதாகவுமே இருக்கும். மலையகத் தேசிய எழுச்சி என்பது மலையகத்தில் வாழ்பவருக்கென

→ 12

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் ஆவணக் காப்பகமாக ஒரு தனி மனிதன்

மாதவன்

1981இல் யாழ்ப்பாணப் பொது நூலகம் அரச படைகளினால் எரியுண்டது.

1987இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகத்தின் தென்னாசியப் பகுதி (south asia section)இந்திய அமைதி காக்கும் படையினால் அழியுண்டது

மறக்க முடியாத,மறக்கக்கூடாத நிகழ்வுகள்.

இது ஒரு பின்னனி.

தமிழரின் வரலாற்றில் தமிழர்கான வரலாறு சரியாக எழுதப்படாதற் கான காலம் அனேகம். முக்கியமாக வரலாற்றுக் குறிப்புகள் ஒழுங்காகத் திரட்டப்படவில்லை. அதனால் தமிழரின் வரலாறு பொய்யும் புனைவும் கொண்டதாக அமைகிறது. இதனால் வரலாறு பற்றிய குறிப்புகள் அவசியம்.

இது மறு பின்னணி

குரும்பசிட்டி **இரா. கனகரத்தினம்** என்றொரு மனிதர் இருக்கின்றார். அவரது முக்கியமான ஆவண வேலைகள் பற்றியதே இக்குறிப்புகளின் நோக்கம்.

1955ஆம் ஆண்டிலிருந்தே ஈழத்தில் தமிழில் வெளிவரும் சஞ்சிகைகள், நூல்கள், பிரசுரங்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்துள்ளார்.

காரணம் என்ன என்று வினவின போது, **சரித்திரம் ஒரு பாடமாக எடுத்த போது தமிழரின் வரலாறு சரியாக ஆவணப்படுத்தப்படவில்லை என அறிந்தேன். பல நூல்களை, சஞ்சிகைகளை பல இடங்களில் தேடி அலைந்தும் பெற முடியவில்லை. அதனால் எனக்குக் கிடைக்கிற சஞ்சிகைகளை, நூல்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். அதில் வளர்த ஆர்வம் இன்னும் இன்னுமென தேடத் தூண்டியது.''**

இவ்வாறு அவர் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தத் தொடங்கினார்.' **'தமிழரின் வரலாறு ஒழுங்குபடுத்தப்பட வில்லை''**என்பது இவரது ஆதங்கம். இவர் பழம்பத்திரிகைகள் விற்கும் கடைகளுக்குச் சென்று சஞ்சிகைகள் நூல்களை விலைக்கு வாங்கிச் சேகரிப்பார். தனி மனித முயற்சியாக, மனைவி ஒருவரின் துணையுடன் மாத்திரமே இந்த வேலைகளைச் செய்கிறார்.

முக்கிய செய்திகளை வெட்டி ஒட்டுதல், அந்தச் செய்தியைத் தேடி பத்திரிகை பத்திரிகையாக விலைக்கு வாங்குதல் என நேரமும், பணமும் விரயமாக்கப்படுவது பற்றி இவர் கவலைப்படவில்லை. மிகப் பிரயோசனமானது எனவே அதனை நம்புகிறார் ஆனால் இதில் ஒருவரினதும் உதவி இல்லை என்பதே, அவரது கவலை. பலர் சந்திக்கிற போது, அல்லது வீடு வந்து தொகுப்புக்களைப் பார்வையிடுகிற போது உற்சாகப் படுத்துவார்கள். தாங்கள் எவ்வாறு உதவலாம் என்றும் கேட்பார்கள் ஆனால் சொல்லுவார்கள், ஒன்றும் செய்யமாட்டார்கள் என்பதும் இவர்கவலை.

இவர் தனது தொகுப்புகளை தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் என பகுதியாகத் தொகுத்து வைத்துள்ளார்.

எந்தவொரு கருத்துக்கும் சார்பாக ஆவணங்கள் தொகுக்கப்படவில்லை. என வற்புறுத்திக் கூறுகிறார். ஏன் என்று கேட்ட போது, **''வரலாறு ஒருவருக்கும் சார்பானதாக இருக்க முடியாது. வரலாறில் முழு உண்மைத் தன்மை இருக்க வேண்டும்.''**என்கிறார். இதனால் அனைத்துக் கட்சிகளினதும், பிரசுரங்கள் இவர் வசமிருக்கின்றன.

இவர் எதிர் நோக்குகின்ற சிரமம் இரு வகையானது. யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது இவரை நிரம்பவும் பாதிக்கிறது. இவரது ஆவணங்கள் பல உரும்பிராயிலிருக்கின்றன. அவற்றை எப்பாடு பட்டாது பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அதற்கு நிறையச் செலவாகும் என்பது ஒருபுறமிருக்க, அதனை ஏதாவது ஒரு நிறுவனம் பொறுபேற்றுச் செய்ய வேண்டும் என விரும்புகிறார். அது தான் சாத்தியமுமாகும்.

மற்றது, மிக முக்கியமானது இந்த ஆவணங்கள் காலத்துக்கு இரையாகி விடும். அதற்கு முனனர் இவை காப்பாற்றப்பட வேண்டும். அதற்கு ஒரேயொரு மிகச் சிறந்த வழி 'மைக்றோ ஃபிலிமில் (micro film)இதனைப் பதிவு செய்வதே ஆகும். கனகரத்தினம் அவர்கள் இதற்கான செலவைக் கணக்கிட்ட போது, ரூபா 1,60,000/= முடியுமென்கிறார். இது தன்னால் இயலாது என்கிறார். இதனை நிறுவனங்கள், வெளிநாட்டில் உழைக்கும் தனி .நபர்கள் மூலமாகவே பெற்றுக் கொள்ள முடியும் என்கிறார்.


இதற்கு இவரது இயல்பான குணங்களும் தடையாக உள்ளன. **''ஒருவர் வீட்டுக் கதவையும் என்னால் தட்ட முடியாது.''**என்பது அவர் இயல்பு. தமிழ்ப் பாராளுமன்ற அரசியல்வாதிகள் உதவி செய்கிறேன் என்று விட்டு ஏமாற்றிய கதைகளும் இவரிடம் ஏராளமாக உண்டு. 'போட்டோஸ்ரட்' இயந்திரமும் இவருக்குப் பல வழிகளில் உதவி புரியும்.

**ஆவணக் காப்பகம்** என்பது தான் இவரது இலட்சியம். வரலாற்றுத்துறைப் பேராசிரியர் **சி.பத்மநாதன்** இவருக்கு உதவி. **உலகத் தமிழ் ஆராய்ச்சி** நிலையம்எனும் அமைப்பை நிறுவியுள்ளார். பிறரது உதவியை இந்நிறுவனத்தினூடாகவே பெற்றுக் கொள்ள விரும்புகிறார். இந்நிறுவனத்தின் வங்கிக்கணக்கொன்றை ஆரம்பித்தபின் அதனை சரிநிகரில் பிரசித்தப் படுத்துவோம்.

**''நூறு வருடங்களுக்குப் பிறகும் எத்தகைய பாதிப்பும் இல்லாமல் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு சொத்தாக நிரந்தரச் சொத்தாக இதனைக் கொடுக்க விரும்புகிறேன்''** என்கிறார் கனகரத்தினம். **''நாம் எவ்வாறு இருந்தோம் என்பதனை அவர்கள் அறிய வேண்டும். சரியாகத் தொகுத்து மைக்ரோ பிலிமில் பதித்து விட்டுத்தான் சாக வேண்டும்''** என்கிறார் **குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்.** இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரையான அனைத்து தகவல்களையும் ஒய்வொழிச்சல் இல்லாமல் சேர்த்து வைத்துள்ள அவரது சேகரிப்புகளைப் பார்க்கும் போது நாம் பிரமித்துப்போகிறோம். ஒரு தனிமனிதனாக இவ்வளவு முயற்சியையும் அவர் செய்ததைக்குறித்த எமது வியப்பை தெரிவிக்கையில் தனது மனைவியின் அன்பான புரிந்துணர்வுடன் கூடிய ஒத்துழைப்பை நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

அவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

128/8 Chetty gardens,
Mulgampola,
Kandy
தொலைபேசி: 22521



▲ இரா.கனகரத்தினம் மனைவியுடன்




▲ ஆவணமாக்கப்பட்ட ஏடு

## சண்டே ...

கிறது அரசு. அதன் முயற்சிகளை பெரிதாக விளம்பரப்படுத்துகிறது இந்த ஏரிக்கரைப் பத்திரிகைகள். மறுபுறத்தில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான குடியேற்றம், வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பான பிரச்சினைகள் வரும் போது இப் பத்திரிகைகள் சிங்களப் பேரினவாத சக்திகளின் கருத்துக்களையே பிரதிபலிக்கின்றன. இதில் முன்னணியில் நிற்பது சண்டே ஒப்சேவர்.

அது இப்போது சரிநிகரில் கைவைத்துள்ளது.

சரிநிகர் எந்தக் கட்சிக்கும் எப்போதும் ' புறோ ' (PRO)வாக இருந்ததில்லை. அது இந்த சண்டே ஒப்பேவருக்குத் தான் கைவந்த கலை. ஆட்சி மாறும் போதெல்லாம் நிறத்தை மாற்றுவது.

சரிநிகர் யாருக்காவது புறோவாக (PRO) - சார்பாக இருந்திருக்கின்றதென்றால் அது இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத்தான்; இன ரீதியாக அழித்தொழிக்கப்படுகிற தமிழ் மக்களுக்காகத்தான்.

இதற்காக சரிநிகர் புலிசார்பு பத்திரிகை என்று யாராவது சொன்னால் அதற்காக சரிநிகர் கவலைப்படப் போவதில்லை; உண்மையில் அப்படி ஒரு முத்திரை குத்தல் சரிநிகர் தனது பணியைச் சரிவரச் செய்கிறது என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது என்றே: சொல்ல வேண்டும்.

ஆ-ர்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## மாகாண சபைத் தேர்தல்....

# ''எனக்குப் புள்ளடி போடுங்கோ

## என்று சந்திகளில் நின்று கத்துவர்''

ஏழு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுவிட்டன.
அவைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் இறுதியில் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
அறிவிக்கப்பட்டதுதான் தாமதம் இதுவரை தூங்கி வழிந்து கொண்டிருந்த கட்சிகள் எல்லாம் சுறுசுறுப்பாகவாரம்பித்துவிட்டன.
மாகாண சபைகள் தமிழர்க்கு ஏதாவது அதிகாரங்களை வழங்கி விடுமோ என்று 88 இல் நடைபெற்ற முதலாவது மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரித்திருந்தது சுதந்திரக்கட்சி.
அவ்வாறெதுவும் இல்லையென்று கண்டுகொண்டதோ என்னவோ வரிந்து கட்டிக் கொண்டு இம்முறை தேர்தலில் குதித்துள்ளது. போதாதற்கு ஐந்து கட்சிகள் கொண்ட ஐக்கிய முன்னணி ஒன்றையும் உருவாக்கியுள்ளது.
இந்தப் பொது ஐக்கிய முன்னணியில் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ( வை.பி.சில்வா அணி ), தேச விடுதலை மக்கள் கட்சி ( டி.ஜே.வி.பி ) ஆகியன அங்கம் வகிக்கின்றன. சின்னம் நாற்காலி என்று கேள்வி. நாற்காலி போட்டிக்கேற்ற சின்னம்தான் போகட்டும்.
இந்த ஐக்கிய முன்னணியில் இணைந்திருக்கும் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சி வடகிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்று தெரிவுக் குழுவுக்கான அறிக்கையில் தெரிவித்திருந்தது. இப்போ அதை எதிர்க்கிற சுதந்திரக் கட்சியுடன் கூட்டு. இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளின் வரலாற்றைத் தெரிந்து வைத்திருப்பவர்களுக்கு இது ஒன்றும் அதிசயமில்லைத்தான். ஏனெனில் 70களில் இதே கூட்டுத்தான் புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களது அற்ப உரிமைகளையும் பறித்துக் கொண்டது என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்த ' தேர்தல் கால ' ஐக்கிய முன்னணி திரும்பவும் வந்திருக்கிறது. வோட்டுக் கேட்க; காணாமல் போன ஜனநாயகத்தைக் கண்டு பிடிக்க; பத்திரிகையாளர்களுக்கு சுதந்திரம் கோர. இவர்களது ஆட்சிக் காலத்தில் காணாமல் போன ஜனநாயகத்தையும், நசுக்கிப் போட்ட பத்திரிகைக் குரலையும் யாரிடம் கேட்க முடியும்? 88 இல் காவு கொடுத்த தென்னிலங்கை இளைஞர்களின் பெற்றோரின் அனுதாபத்தின் மேல் நாற்காலியைப் பிடித்து விட நினைக்கிறது. சரி, 71 யாருடைய ஆட்சிக் காலம்?
ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியினர் சும்மா ஒரு வித்தியாசத்திற்கு ஐ.தே.க. என்பதற்கு முன்னால் ' ஜனநாயக ' என்று போட்டிருக்கிறார்கள் தவிர வேறொன்றுமில்லை. இம்பீச்மென்றுடன் ஐ.தே.கவிலிருந்து வெளியேறியவர்கள் தங்களிடம்தான் யானை பலம் உள்ளதாகச் சொல்லிக் கொள்பவர்கள். அந்த யானைப் பலத்தல் யார் தலைவர் என்று தெரியாமல் தமக்குள் முரண்டு கொண்டவர்கள். இப்போது தீர்வாக சுழற்சித் தலைமை வந்திருக்கிறது. இந்த வருடத்திற்கு முதலி அவர்கள். அத்துலத் முதலி. தமிழ் மக்களால் அன்பாக '' அச்சுலக்கை '' என அழைக்கப்பட்டவர். மற்றையவர் காமினி. இவர்களைப் பற்றி அதிகம் தேவையில்லை. வடமராட்சிப் படுகொலைகள் முதலியையும், யாழ்ப்பாண நூல் நிலையத்தின் எரிப்பு காமினியையும் ஞாபகப்படுத்திவிடும்.
மற்றையது ஐ.தே.க. வழமை போல பச்சை கட்டிக் கொண்டு தேர்தலுக்கு ஆயத்தமாகி விட்டது.
'' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக '' திறந்து வைக்கப்படுகிற ஆடைத் தொழிற்சாலைகளுக்குள்ளால் ( திறந்ததில் எத்தனை மூடப்பட்டு விட்டன. எத்தனையில் தொழிலாளர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கிறார்கள் என்கிறதெல்லாம் நமக்கெதற்கு ) தனது வாக்குகளைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்கிற நம்பிக்கை அதற்கு. போதாததற்கு எதிர்க்கட்சிகளில் இறுதி ஏழு வருட ஆட்சியின் நீண்ட கியூக்களை ஞாபகப்படுத்தியும், 71 இல் களனி சிவப்பாக ஓடியது என்றும், சண்-தவச குறூப்பை மூடியது யார் என்று கேட்டும் தனது வாக்குகளை உறுதிப்படுத்தப் பார்க்கிறது.

### இ.சங்கரன்

இ.தொ.கா வழமை போல இம்முறையும் யானையின் கீழ். தமது சச்சரவுகளை சுமுகமாக முடித்துக் கொண்டு தேர்தலில் இறங்குகிறது. முஸ்லீம் காங்கிரஸ் இம்முறை தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.
எல்லாரும் ஏறிக் களைத்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறியதுபோல இந்த முறையும் ந.ச.ச.கட்சி தேர்தலில் குதித்துள்ளது. கூட்டாக கொஞ்ச '' ஜனநாயக '' சக்திகள், தொழிற்சங்கங்களுடன்.
தமிழ்க் கட்சிகள்தான் செய்வதறியாது விழி பிதுங்கி நிற்கின்றன. டக்ளசைப் போல் இருந்திருந்தாலாவது ஐ.தே.கட்சிக்கே எனது பூரண ஆதரவு என்று விட்டு சிவனே என்று இருந்திருக்கலாம்.
வடகிழக்கிற்கு தேர்தல் இப்போதைக்கு இல்லை. தெரிவுக் குழுவும் கைவிரித்து விட்டது. கைவிரிக்கும் என்று தெரியாமலா இருந்தது. தெரியும். தெரியும் என்று முன்னரே சொல்லியிருந்தால் பின்னே பிழைப்பது எப்படி? இனி ஏதாவது புதுசா இனப் பிரச்சினை பற்றி ஆராய கொமிஷன் கிமிஷன் போடு மட்டும் பிரச்சினைதான். ஏதாவது தொடங்கி விட்டால் '' தீர்வு வரும் நம்பிக்கை இழக்கவில்லை '' என்று சொல்லி சமாளித்து விடலாம். அதுவுமில்லை.
குமார் பொன்னம்பலமாவது மாகாண சபைத் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்றார். மற்றக் கட்சிகளுக்கு அதைச் சொல்லவும் துணிவில்லை.
இந்த இடத்தில் முக்கியமான ஒரு விடயம், இலங்கையின் நீண்டகால இனப் பிரச்சினையைத் தீர்க்கவென இலங்கை - இந்திய அரசுகள் சேர்ந்து உருவாக்கியதுதான் இந்த மாகாண சபை. இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என முன்னர் கூறப்பட்டது. மாகாண சபைகளின் இந்த ஐந்து வருட காலத்தில் எந்த முன்னேற்றமும் இதில் ஏற்படவில்லை. போதாக்குறைக்கு கலைக்கிற அதிகாரத்தையும் கையளித்தாயிற்று. குடியேற்றங்கள் தொடர்கின்றன. மாகாணங்களிடம் நில உரிமை கையளிக்கப்படவில்லை. வேறெந்த அதிகாரமும் கூட இல்லை. வடகிழக்கு தனித்தனியாக்கப்பட வேண்டுமென சிங்களக் கட்சிகள் யாவும் முடிவெடுத்துள்ளன. தெரிவுக்குழு முன்கூட்டியே எதிர்பார்த்தபடி கைவிரித்துள்ளது.
ஆக, எந்த சிறுபான்மையின மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதோ அந்த சிறுபான்மையின மக்களது பிரச்சினைகள் அந்த மாகாண சபையின் இரண்டாவது தேர்தல் களியாட்டங்களுக்குள் காணாது விடப்படப் போகிறது என்பதுதான் தமிழ் மக்களுக்கு கிடைக்கிற செய்தி.
சரி
வாக்களிப்பு யாருக்கு?




## பிரபாகரனுக்குப் புரியுமா?

**புத்திர சோகம் பெரியது. கிட்டு எப்படிப்பட்டவராயினும் அவரது அம்மாவின் சோகம் மதிக்கப்பட வேண்டியது. ஆனால், மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்ததற்காகவே கொல்லப்பட்ட பலநூறு தமிழ் இளைஞர்களின் அம்மாக்களது சோகத்தைப் புரிந்து கொள்ள முடியாத பிரபாகரனுக்கு இது புரியுமா?**

## மலையகத்தில்....

மலையகத்தில் ஒரு தனியான நிர்வாகப் பிரிவை கோருவது மட்டும்தான் என்றும் குறுகிய எல்லையைப் போடவேண்டியதில்லை.

மலையக தேசிய எழுச்சியில் எல்லா இந்திய வம்சாவளி மக்களும் இணைக்கப்படும் போது மலையகத் தேசியம் பலமடைவதுடன் மலையகத்தில் மட்டுமன்றி மலையகத்திற்கு வெளியில் சமூகமாக வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கும் நிர்வாக ரீதியாக அமைப்புகளைப் பெறமுடியும்; பெற வேண்டும். அதன் மூலம் ஒரு பாரம்பரிய பிரதேசமில்லாத இனச் சமூகத்தின் சுயநிர்ணய உரிமையையும் உறுதி செய்ய வழிவகைகளை உண்டுபண்ண முடியும்.

கொழும்பில் வாழும் ஓரிரு இந்தியப் பணமுதலைகள் இலாபமடைவார்கள் என்ற அர்த்தமற்ற பயத்தால் மலையக தேசிய எழுச்சியுடன் எல்லா இந்திய வம்சாவளி மக்களையும் இணைக்கத் தவறக் கூடாது. அந்த ஓரிரு இந்தியப் பண முதலைகள் மலையகத் தேசிய எழுச்சிக்குள் வரமாட்டார்கள். அதனால் அவர்களுக்குப் பயன் ஏற்படப் போவதும் இல்லை. ஏனெனில் அவர்களின் வர்க்க நலன் அவர்களின் பணப்பலத்தினால் இலங்கை அரசாங்கத்தாலும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தாலும் எப்போதும் பாதுகாக்கப் பட்டே வருகின்றது.

ஆனால் இந்தியர்கள் என்பதற்காக அடக்கப்படுகிறார்கள் என்ற அடிப்படையில் மலையகத் தேசிய எழுச்சியில் சேர்ந்துகொள்ள அடக்கப்படுபவர் எவராக இருந்தாலும் உரிமை உண்டு. அந்த உரிமையைத் தடுக்க யாருக்கும் அருகதையில்லை. வர்த்தகர்கள் அல்லது பணம் படைத்தவர்கள் என்பதற்காக மலையக தேசிய எழுச்சியில் இணைந்து கொள்ளும் உரிமை இல்லாது போய்விடாது. அத்துடன் மலையக தேசியத்தை குறுகிய பிரதேசத்துக்கு மட்டும் உரியதாக, ஏனைய பிரதேச தமிழ் மக்களுக்கு எதிரானதாக அல்லது ஏனைய இன மக்களுக்கு எதிரானதாக கொள்ளப்படவோ, முன்னெடுக்கப்படவோ கூடாது. மலையகத்திலுள்ள ஒரு சிலரின் தனிப்பட்ட அபிலாசையர்கவும் மலையகத் தேசிய எழுச்சி முன்னெடுக்கப்படலாகாது.

மலையகத் தேசிய எழுச்சி என்பது ஒரு தனிநாட்டுக் கோரிக்கை என்றோ ஏனைய இனமக்களுடன், பிரதேச மக்களுடன் ஐக்கியப்படுவதற்கு மாறானதாகவோ கொள்ளப்படலுமாகாது.

## நாடக விழா

அரங்காடிகள் வழங்கும்

இரு நாடகங்கள்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின்

**இப்போதைக் கேது வழி**

நா.சுந்தரலிங்கத்தின்

**அபசுரம்**

24.04.1993 சனி மாலை 6.00 மணி
பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில்
நுழைவுச்சீட்டுகள் மண்டபவாயிலில்.

சரிநிகர் மாத இதழ் இல. 06 அலோசாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில்